Reg. No. M. 1482.

ஸமரஸ போதினி.

The "Samarasabodhini"-A Tamil Weekly

Published in Tanjore, devoted to Politics, Education, Industry, Agriculture & Village improvement. etc.,

"தெரிந்த வினத்தோடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்
கரும் பொருள் யாதொன்றுமில்."

"எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்
திண்ணியராகப் பெறின்."

இ. சூரியநாராயண ஐயர் பி. ஏ., பி. எல்., பத்திராதிபர். **E. Suryanarayana Aiyar** B. A., B. L., *Editor*.

புத்தகம் 1. | ரௌத்திரி௵ ஆவணி மீ உசவ புதன்கிழமை **8th September 1920.** தஞ்சாவூர். | பிரதி 13.

ஸமரஸ போதினி.

சந்தா விவரம்:—

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய விடங்களுக்கு	ரூ 5—0—0
ஆறுமாதங்களுக்கு	ரூ 3—0—0
பினங்கு, சிங்கப்பூர், முதலிய விடங்களுக்கு	ரூ 7—0—0
ஆறுமாதங்களுக்கு	ரூ 4—0—0
தனிப் பிரதி விலை	ரூ 0—2—0

விளம்பர விகிதம்:—

பத்தி 1க்கு மாதம் 1க்கு	ரூ 20—0—0
4 insertions per month per column	Rs. 20—0—0

3 மாதங்களுக்குக் குறையாமல் விளம்பரம் ஒப்பந்தம் செய்து கொள்பவர்களிடம் மிகவும் குறைந்த விகிதம் வாங்கப்படும்.

Kerosine Gas Stoves.

கியாஸ் அடுப்புகள்.

இதன் உபயோகம் அவசியமென்பது ஜனங்கள் அறிந்த விஷயம். தனி சாமான்களும் கிடைக்கும். கியாட்லாக் இனாம்.

கோரனுஸ்ட்வ் நே. 5. ரூ **14-0-0.**

லென் கம்பெனி, தஞ்சாவூர்.

"The Young India."

A high class English weekly edited by Mahatma Ghandi. Only Rupees five per year. Oh! Sons & Daughters of Ind! Subscribe by thousands. In helping it you help yourselves.

The Manager, **Young India.**
Ahmedabad.

நாணயமும் நயமுமான

இடம்

ஒரு தடவை பரீக்ஷை செய்து பாருங்கள்.

ஓரியண்டல் வேர்ஹவுஸ தஞ்சாவூர்

பட்டு அங்கவஸ்திரங்கள்.

பிரதிதினமும் தோய்க்கக் கூடியதும் நெடுநாள் உழைக்கக்கூடியதும் மிக அழுத்தமுமானது, முந்தானை குஞ்சம் கட்டின பட்டு அங்கவஸ்திரங்கள். வெண்மை, சந்தனகலர், கோல்டு கலர், மேகவர்ணம், பச்சை, நீலம், ஆகாயம், சிவப்பு, ரோஸ், முதலான பல கலர்களில் கிடைக்கும். இவைகள் அங்கவஸ்திரங்களாகவும், டர்பனுகவும், உபயோகித்துக் கொள்ளலாம். விலை சாஸம்.

சாதா சேலைகள்.

காப்பிகலர் கோக்கோ கலர், மக்கலர், காங்கு கலர்களில் ஒம்ருல் சேலைகள், பூனமுந்தி சேலைகள், பிரதிதினமும் தோய்த்து உடுக்கக் கூடியது. நெடுநாள் உழைக்கக் கூடியது. கெட்டி சாயமுள்ளது.

ஜமக்காளங்கள்.

சர்கூட் ஜம்க்காளங்கள் இங்கிலீஷ் பாட்டரன் கண்களை கவறக்கூடியது. மிக அழுத்தமானது.

பிடிக்காத திணுசுகள் வாபீஸ் பெற்றுக்கொண்டு வேறு திணுசுகள் அனுப்பிக் கொடுக்கப்படும். ஆகவே நேரில பார்த்து வாங்க வில்லையென்ற எண்ணம் வேண்டாம்.

"வைசிய மித்திரன்."

இது காரைக்குடியினின்றும் வாரந்தோறும் அருமையான விஷயங்களுடன் ராயல்ஸைஸில் வெளிவரும் ஒரு வாராந்தத் தமிழ்ப் பத்திரிகையாகும். இது வியாபார விருத்திக் குரிய விஷயங்கள், கைத்தொழிற் குறிப்பு, விவசாய நுட்பம், விநோதக் குறிப்பு, அந்நிய வர்த்தமானம், பொது வர்த்தமானம், இராஜாங்க சமாச்சாரம், ஆகிய இவ்விஷயங்களுடன் வெளி வருகிறது. இந்திய மக்களுக்குப் "புதிய ஊக்கமும், செல்வப்பெருக்கம் வளருமாறு, பற்பல ஆராய்ச்சி வியாசங்கள், ராஜதந்திர நுட்பங்கள்" இவற்றை வெகு அழகாக எடுத்துப் போதித்து வருகின்ற இப்பத்திரிகையானது ஒவ்வொரு தமிழராலும் படிக்கத்தக்கதெனப் பல பத்திரிகைகளாலும் புகழப்படுகின்றது. இந்தியாவுக்கு வருட சந்தா ரூபாய் 5-0-0 (ரூபாய் ஐந்தே) வெளி நாடுகளுக்கு ரூபாய் 6-0-0.

மானேஜர்,
"வைசிய மித்திரன்" காரைக்குடி.

சர்வஜன மித்திரன்.

வாரம் இருமுறை புதன் சனிக்கிழமைகளில் வெளிவரும்.

நீர்வளம் நிலவள மலிந்த பினங்கின் கண் வந்துலாவும் நமது இந்திய வாசிகளின் முன்னேற்றத்தையும் கல்வியபிவிருத்தியையும் உள்ளத்திலூன்றி அன்னவர்கள் பாஷாபிமானம் ஜனபிமானம் மதாபிமானம்பூண்டு சமூக வாழ்வில் நற்பெயரெய்தவும் அரசாங்க வர்க்கத்தினர் பால் விசுவாசம் படைத்தொழுகவும் உலகின் கண் ஆங்காங்கு நடைபெறும் சமாச்சாரங்களை எளிதிலுணரவும் வேதம், வைதீகம், வேதாந்தம், சித்தாந்தம் சாஸ்திர ஞானங்களையும் ஏனைய நாட்டின சம்பவங்களையும் அங்கத்திலேந்தி வெளியுலாவ மகுடத்தில் காணும் நாமம்புனைந்த தமிழ் பத்திரிகை அச்சிடப்பட்டு வருகிறது. இப்பத்திரிகையை யாவரும் ஆதரிப்பார்களாக.

சந்தா விபரம்.

உள்ளூர் சந்தா.		வெளியூர் சந்தா.	
வருஷம் 1-க்கு	$10 00	வருஷம் 1-க்கு	$15 00
6-மாதத்திற்கு	5 50	6-மாதத்திற்கு	8 00
3-மாதத்திற்கு	3 00	3-மாதத்திற்கு	4 50
1-மாதத்திற்கு	1 00	1-மாதத்திற்கு	1 50
தனிப்பிரதி 15-காசு		தனிப்பிரதி 18-காசு.	

கு. அ. அசன் முகைய்யதீன்,
மானேஜர், சர்வஜன மித்திரன்,
97. பினங் ஸ்திரீட், பினங்கு.

டாக்டர் பீட்டர் அவர்களால்
கண்டு பிடிக்கப்பட்ட சுகானந்த
(இரகஸ்ய ரப்பர் பை.)

SUKANAND.

இக்கருவி அமெரிக்கா தேசத்தில் மிருதுவான ரப்பரால் தயார் செய்யப்பட்டது. இதை உபயோகித்தால் ஸ்திரீ சம்பந்தமான (Venereal Diseases) மேகரோகங்கள் அணுகாமல் சரீரத்தை வெகு ஜாக்கிரதையாய் காப்பாற்றும். ரப்பர் பை 1-க்கு டின்னுடன் ரூபா 1—4—0.

டாக்டர் பீட்டர்,
நெ. 3. இருளப்பன் வீதி, மதராஸ்.

தேசபக்தர்கள் கவனிக்க.

1. இந்திய மாதா கட்டுப்பட்டிருக்கிருள். இக்கட்டுகளினின்றும் அவள் மீண்டும் சுயேச்சையாக வாழத் தீர்மானித்திருக்கிருள்:— அன்னிபெசண்டு.

2. ஒவ்வொரு தேச ஜனங்களின் தலையில் கடவுள் தம்இஷ்டத்தை எழுதியிருக்கிருர்; அது நடக்கிறபடி நடக்கும். அதை எவராலும் மாற்ற முடியாது:— மாஸினி.

3. சுதந்தரமாக யிருப்பதே ஒரு தேசத்து அரசாங்க வாழ்க்கையின் எல்லைக் கோடியாகும். இதை ஜனங்கள் அறியவேண்டும்:— லார்டு ஆக்டன்.

4. தென் ஆப்பிரிக்காவைப் பிரிட்டிஷார் ஜெயித்த சில வருஷங்களுக்கெல்லாம் அத்தேச வாசிகளாகிய போயர் ஜாதியர்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்குட்பட்டுச் சுய ஆட்சியைப் பெற்ருர்கள்; ஆனல், பிரிட்டிஷார் இந்தியாவைக் கைப்பற்றி நூற்றைம்பது வருஷங்களுக்கு மேலாகியும் அவர்கள் இந்தியாவுக்குச் சுய ஆட்சி கொடுக்கவில்லை:— தாதாபாய் நௌரோஜி.

5. இந்தியாவில் நாம் அரசுசெலுத்துவோராயிருந்தாலும் இந்தியாவின் தேச காரியங்களில் இந்தியர்களைப் பழக்கி அவர்களைக்கொண்டே அக்காரியங்களைச் செய்யும்படி தூண்டவேண்டும்:— ஸர். ஜான் லாரன்ஸ்.

பிளுபிளாக் இங்க் மாத்திரைகள்.

விலை சரஸம், எழுதினல் அழியாதது. பிரகாசமுள்ளது. இங்கியில் திப்பி கிடையாது. ஒரு இங்க் பாட்டில் ரிரம்ப இங்க் கரைக்க ஒரு மாத்திரை போதும். (தபால் கூலி பிரத்தியேகம்.)

ஏ. ச். பிரதர்ஸ் & கோ.
61, ராஜாநாபா கிருஷ்ண தெரு,
கல்கத்தா.

" தாங்கள் "

நோயற்ற வாழ்வுடன்

சுக ஜீவியாய் ஜீவித்திருக்கவும், ஆயுள் விருத்தியையும் சந்தான சந்ததிகளையும் பெருக உண்டாகச் செய்யக்கூடிய

புத்தகம்,

தங்களுக்கு வேண்டுமானல் அரை அணுஸ்டாம்பு அனுப்பினல் இனமாகவே அனுப்பிவைப்போம்.

ஹக்கீம் S. P. M.
அப்துல்கனிராவுத்தர்,
வலங்கைமான்,
தஞ்சை ஜில்லா

இனம்! இனம்!! இனம்!!!

ஸமரஸபோதினி சந்தாதாரர்களுக்கு மாத்திரமே

(செப்டம்பர் மாதம் 30-ந் தேதிக்குள் ஆர்டர் செய்வோருக்கு.)



இங்கிலாந்தில் பெயரெடுத்த "வாட்டர்மேன்" பவுண்டன்பேனவையொத்த ஒருபுதமாதிரி "வேல்லஸ்லி" என்ற பெயருடன் ஒரு பேனு இப்பொழுதுதான் எமக்குவந்தது. இதன் விலையையும், அமைப்பையும் கவனித்தால் இதற்கு கொடுக்கும் விலை மிகவும் சொற்பமென்றே சொல்லலாம். இது 14 காரட்டு பொன்நிப்புடனும், மிக அழகாயும் ஷ பேனுவின் மூடிகளில் ஸ்குரு வைத்திருப்பதாயும், ஷ பேனுவை பாக்கெட்டில் எந்த மாதிரி போட்டாலும் இங்கிகொட்டாவண்ணம் செய்யப்பட்டிருக்கின்றது. இது இங்கிலாந்தில் எமக்கென்றேசெய்யப்பட்டவை. எமக்கு இந்த "வெல்லஸ்லி" பேனுக்கள்பிரதிதினமும் நூற்றுக்கணக்காய்செலவாகி வருகிறபடியால் தேவையுள்ளோர்சீக்கிரம்நமக்கு ஆர்டர்செய்துபெற்றுக் கொள்ளவும்.

"வேல்லஸ்லி" பேனுக்களில் பல மாதிரிகள்.

வெல்வஸ்லி சேப்டி நெ. 11 இது வாட்டர்மென்ஸ் சேப்டி பவுண்டன் பேனுவை போலவேயிருக்கும் விலை ... ... ரூ. 4 8.
ஷ ,, 12 ... ... ,, 5 0.
ஷ ,, 206 சேப்டி செல்ப் பில்லர் இந்த பேனுவிற்கு இங்கிபோட வேண்டுமென்ருல் ஷ பேனுவை இங்கிபுட்டியினுள் காட்டி பேனுவின்மேலுள்ள ஸபிரிங்கை தூக்கினல் பேனுவானது இங்கியை தானகவே உட்கொள்ளும். ,, 5 8.

எமது விலாசம்:— "ஸமரஸபோதினி" சந்தாதாரருக்கு தபாற்கூலி இனம்.

ஸ்டேஷனரி சப்ளை கம்பெனி, மதராஸ்,

நோட்டீஸ்.

தஞ்சாவூர் கோட்டை தெற்கலங்கம் தெருவில் காரைக்குடியிலிருந்து வந்து லேவாதேவி கடை வைத்திருக்கும், மெ. சு. பழனியப்ப செட்டியாகிய யென்னல் ஷ கடைக்கு பவர் யேஜண்டாக ஷ தஞ்சாவூர் கோட்டை வெளி கீழவாசல் பெரிய அரிசிகாரத் தெருவிலிருக்கும் அளகப்பிள்ளை குமாரர் சாம்பசிவம்பிள்ளைக்கு 10-12-19 தில் கொடுக்கப்பட்டிருந்த ஜெனரல் யேஜண்டு பவர் ஆப் அட்டாணியை 12-8-20 தில், கியான்சல் செய்துவிட்டேன். ஷ 12-8-20 முதல் ஷ சாம்பசிவம்பிள்ளை யென்னுடைய பவர்ஏஜண்டும் அல்ல. மேற்படி கடை சம்பந்தமான ஏஜெண்டுமல்ல. இது சங்கதியை இதன்மூலமாகச்சகலருக்கும் தெரிவிக்கலானேன். இதோடு ஷ சாம்பசிவம் பிள்ளைக்கு ஷ கடை நடவடிக்கை விஷயமாய் யென்னுடைய தம்பி மெ. சு. சுப்பிரமணியஞ்செட்டியால் 10-12-19 ல் கொடுக்கப்பட்டிருந்த ஜெனரல் யேஜண்டு பவர் ஆப் அடடாணியையும் 20-8-20 ல் கியான்சல் பண்ணி நிறுத்திவிட்டபடியால் ஷ 20-8-20 முதல் ஷ சுப்பிரமணியஞ் செட்டிக்கும் மேற்படி கடைக்கும் ஷ சாம்பசிவம் பிள்ளை பவர் யேஜண்டல்ல வென்பதையும் இதன் மூலம் சகலருக்கும் தெரிவிக்கலானேன்.

தஞ்சாவூர்
22—8—20. } மெ. சு. பழனியப்ப செட்டி,

பல கண்காக்ஷிகளில் மெடல்கள்பெற்ற அபூர்வ ஔஷதங்கள்.

பி. சுப்பராய் ஆயுர்வேத ஔஷதசாலை.

ஸ்ரீ வேங்கடேசபெருமாள் கோவில் சன்னதி, தஞ்சாவூர்.

1. தாதுபுஷ்டி மருந்து:—இதன் குணத்தை எழுதிமுடியாது. அனுபோகத்தால் தெரிந்து கொள்ளலாம். தாதுநஷ்டம், பலஹீனம், பசியின்மை, கண், கால் எரிவு, தேகவரக்ஷி, கை கால் இடுப்பு முதலிய அவயவங்களில் சோர்வு, வலி, சோம்பல், மேகச்சூடு, பாண்டு, சோகை, மேகவெள்ளை, வெட்டை, நீரழிவு, மதுமேகம், சதையடைப்பு, இன்னும் பற்பல மூத்திர ரோகங்களையும்போகும். சரீரபுஷ்டி, புருஷத்தன்மை, ஜீரணசக்தி, அபிரிமிதமான தாதுவிருத்தியையும் யுண்டாகும். நீர்த்திருக்கும் இந்திரியத்தைக் கெட்டிப்படுத்தி போகசக்தியை அதிகரிக்கும். டப்பா 1-க்கு விலை ரூபா 2, வி. பி. சிலவு அணு 5 பிரத்தியேகம்.

2. அக்கினி மாந்தத்திற்கு மருந்து:—பசியின்மை, புளித்த எப்பம், நெஞ்செரிச்சல், மலச்சிக்கல், வயிற்றுவலி, வாய் நாற்றம், அஜீரணம், வயிற்றுப்பிசம், நித்திரையில்லாமை, பித்த உபத்திரவங்களை சொஸ்தப்படுத்தும். பசி தீபனமும், தேக ஆரோக்கியமும் தரும். டப்பா 1-க்கு அணு 8, வி. பி. சிலவு 1 அல்லது 2 டப்பாக்கள் வரையில அணு 5 பிரத்தியேகம்.

3. பிரமேக நிவாரணி:—எந்த காரணத்தினல் உண்டாயிருக்கும் மேகவெள்ளை, வெட்டை, நீர்குற்றல், நீர் தாரை எரிவு, சீழ் ரத்தம் வடிதல், முதலிய வியாதிகளையும் ஆண், பெண் இருதாரத்தார்களுக்கும் சொஸ்தப்படுத்தும். சீசா 1-க்கு விலை ரூபா 1, வி, பி. சிலவு ஒன்று முதல் 6 சீசாக்கள் வரையில் அனுப்ப அணு 5 பிரத்தியேகம்.

நமது நேயர்களுக்கு.

நமது நேயர்கள் தங்களது சந்தாதொகைகளைக் காலதாமதமன்னியில் அனுப்பித்தரும்படி கேட்டுக்கொள்ளுகிருேம். (ப-ர்.)

ஸமரஸபோதினி, தஞ்சாவூர்.

"Be just and fear not,
Let all the ends thou aimest at,
Be thy Country's, thy God's&Truth's"

ரௌத்ரி௵ ஆவணி௴ ௨௪உ புதன்கிழமை.

8th SEPTEMBER 1920.

விசேஷ பாரத மகாநாடு.

நாளது மாதம் 4ந்தேதி சனிக்கிழமையன்று தேசபக்த சிரேஷ்டராகிய ஸ்ரீமான் லாலாலஜபதிராயவர்களின் அக்கிராசனத்தின் கீழ் கல்கத்தா நகரில் பாரத நாட்டின் விசேஷமகா நாடொன்று கூடிற்று. ஈசுவரானுக்கிரகத்தால் இது நல்ல சுபதினத்தில் கூடியதற்கு நாம் சந்தோஷப் படுகிறோம். ஏனெனில் நமது தாய் நாட்டின் முன்னேற்றத்திற்காகவே அவதரித்த வரும், தமது உடல் பொருள் ஆவி இம் மூன்றையும் அத்தாய் நாட்டிற்கேத்தத்தம்செய்தவரும், இந்தியாவில் "சுயராஜ்யம்" ஸ்தாபிக்கப் பட்டாலன்றித் தேசமகாஜனங்களுக்குச் சுகமில்லையென்று கல்கத்தாவில் 1906 வருஷத்திய பாரத மகாநாட்டில் அக்கிராசனம் வகித்து வற்புறுத்தியவரும், தேசத்திலுள்ளோர் அனைவருக்கும் ராஜீய அறிவை ஊட்டினவரும், ஓயாமல் கிளர்ச்சி செய்து காரியசித்தியை அடைவது தான் சரியான வழியென்று உபதேசித்த வரும் தமது அந்தியகாலத்தில் "சுயராஜ்ய" சூரியோதயத்தைக் கண்டு கண்குளிர்ந்தவரும் மனமகிழ்ந்து முதிர்ந்தவயதில் தேகவியோகமடைந்த "தாதாபாய்" என்னும் புண்ணிய புருஷரின் பிறந்த நாளாகிய செப்டம்பர்௴ 4உயன்று மகாநாடு கூடினதானது ஒருநல்ல அறிகுறியென்றே நாம் கருதவேண்டும். இந்த மகாநாடு கல்கத்தாவில் கூடியது இன்னும் விசேஷமாகும். காரணம் தேசிய உணர்ச்சி பிறந்தவிடம் வங்காளமென்னலாம். 1905, 1906 வருஷங்களில் வங்காள சகோதரர்களின் முயற்சியாலும் ஊக்கத்தாலும் தேசமகா ஜனங்களெல்லோரும் "சுதேசியம்" என்னும் விரதத்தைக் கைக்கொண்டார்கள். அவர்களிடம் தேசபக்தி கொழுந்து விட்டெரியலாயிற்று. இன்னும் அந்தத் தேசபக்தி இந்தியர்களிடம் குறையாமல் நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டு வருகிறது. இந்தியாவில் தோன்றிய புதிய உணர்ச்சிக்கும் சக்திக்கும் வங்காளமென்று நாம் கூறுவது மிகையாகாது.

அக்கிராசனம் வகிக்கும் புண்ணிய புருஷர் பஞ்சாப் மாகாணத்தைச் சேர்ந்தவர்; நமது லாலா ஸ்ரீபாலகிருஷ்ணனைப்போல விளங்குபவர்; நமது தேசத்திற்காக வெகு பாடுபடுகிறவர்; கணக்கற்ற கஷ்டங்களை அனுபவித்தவர்; நமது தேசத்திலுள்ளோருக்குப் பல வழிகளில் ஊழியம் செய்தவர்; தேசிய கல்வியைப் பரவச்செய்ய விசேஷமான பரித்யாகங்கள் செய்தவர்; அமெரிக்கா முதலிய அயல் நாடுகளிலிருந்த பொழுது நமது நிலைமையைப் பற்றியும், நமது குறைகளைப் பற்றியும், நமது வேண்டுகோளைப்பற்றியும் அமெரிக்கா தேசத்து ஜனங்களுக்கு எடுத்துச் சொல்லிச் சிறந்த பிரசார வேலை செய்தவர்; தேசபக்தியிலும், கல்வியிலும், ஞானத்திலும், அனுபவத்திலும் முக்கிய பதவியை அடைந்திருக்கும் ஸ்ரீமான் லாலா லஜபதிராய் நமது சபைக்கு இச்சந்தர்ப்பத்தில் அக்கிராசனம் வகிக்குமாறு நேர்ந்தது கருணாநிதியாகிய ஈசுவரன் அனுக்கிரகமே யொழியவேறல்ல.

மகா சபையில் மகாத்மா காந்தியடிகள் தம் சிஷ்யவர்க்கங்களுடன் விஜயமாயிருந்தார். மௌலானா சவுக்கத்அலியும் ஆயிரக்கணக்கான முஸ்லிம்சகோதரர்களும், இந்தியாவின் பல பாகங்களிலிருந்து ஆயிரக்கணக்கான ஹிந்து சகோதரர்களும் மற்றவர்களும், சிறந்த தேசாபிமானிகளும், தலைவர்களும் பிரதிநிதிகளாய் வந்திருந்தார்கள். உபசரணைக்கமிட்டிமெம்பர்களில்சுமார்1500 பேர்களும், பிரதிநிதிகளாகச் சுமார் 4000 பேர்களும் விசிடர்களாக சுமார் 10,000 பேர்களும் விஜயமாயிருந்தார்கள். நமது சென்னை மகாகாணத்திலிருந்து சுமார் 200 முஸ்லிம் சகோதரர்கள் கிலாபத்து கமிட்டிகளின் பிரதிநிதிகளாகச் சென்றிருக்கிறார்கள். எங்குப்பார்த்தபோதிலும் ஊக்கமும் உத்ஸாகமும் நிறைந்திருந்தனவென்று சொல்லப்படுகிறது. மகாத்மா காந்தியவர்களின் "ஒத்துழையாமை"க்கொள்கையை மகாசபையார் அங்கீகரிக்கும்படி செய்யவேண்டியதுதான் தங்கள் முக்கிய கடமை என்று பிரதிநிதிகள் சொல்லிக்கொண்டிருப்பதாகவும் அறிகிறோம். நமது துன்பங்களை அடியோடு நீக்க ஒத்துழையாமையொன்றே சரியான ஆயுதமென்று பிரதிநிதிகள் கருதுவதாகவும் தெரிகிறது.

ஸ்ரீமான் லாலாலஜபதிராய் அவர்கள் வெகு சாமர்த்தியத்தோடும், தைரியத்தோடும், கண்டிப்போடும் தமது பிரசங்கத்தைச்செய்தார். பாஞ்சாலநாட்டின் பூர்வ சரித்திரம், அம்மாகாணத்தில் அதிகாரவர்க்கத்தினர்களின் அட்டூழியத்தினால் ஏற்பட்ட அக்கிரமங்கள், ஸர்மைகெல் ஓட்வியர் ஆட்சியில் நடந்த அநீதிகள், பஞ்சாபில் அனுஷ்டிக்கப்பட்ட கொடிய ராணுவ அமுல், அக்காலத்தில் ஜனங்களுக்கு அதிகாரவர்க்கத்தினர்களினால் உண்டுபண்ணப்பட்ட கொடுஞ்செயல்கள், ஸ்திரீகளுக்கு ஏற்பட்ட மானபங்கம், இன்னும் எடுத்துரைக்க முடியாத விஷயங்கள், ஜாலியன்வாலாபாக்கில் நடந்த படுகொலை விவரம், பாவிடையரின் அஸுரத்தன்மை, அந்த டயரைத் தாங்கிப்பேசும், ராணுவ அதிகாரிகள். பார்லிமெண்ட் மெம்பர்கள், இந்தியாவிலுள்ள இங்கிலீஷ்க்காரர்கள் இவர்களின் மனோபாவம் முதலிய பல அம்சங்களைப்பற்றி வெகு உருக்கமாகவும் தெளிவாகவும் சாங்கோபாங்கமாகவும் லாலா எடுத்துரைத்திருக்கிறார்.

தவிர, ஸர்மைகெல் ஓட்வியரின்மீது மகாஜனங்களின் பிரதிநிதிகளாலடங்கிய மகா நியாய ஸ்தலத்தில் பன்னிரண்டு குற்றங்களைச்சாற்றி அவைகளுக்கு ஸர்ஓட்வியர் சரியான முகாந்திரம் சொல்ல வேண்டுமென்றும், இம்மாதிரியான குற்றங்கள்செய்தவரை தண்டிக்காமலிருப்பது அநீதியாகுமென்றும், இஷ்டம்போல் அதிகாரவர்க்கத்தினர்கள் இனி இந்தியாவில் ஆட்சிபுரிவது முடியாத காரியமென்றும், ராஜப்பிரதிநிதியவர்கள் தமது பதவியினின்றும் விலகாமலிருப்பது பிசகென்றும், பார்லிமெண்டு மெம்பர்கள் பஞ்சாப் விஷயத்தில் நடந்துகொண்ட விபரம் மிகவும் ஆத்திரத்தையுண்டுபண்ணுகிறதென்றும் விரிவாக எடுத்துச்சொல்லியது விசேஷமாகும். அன்றியும் பிரிட்டிஷ் அரசாட்சியில் ஜனங்களுக்குக்கிருந்தநம்பிக்கை அடியோடு அசைக்கப்பட்டு விட்டதென்று கூறியது உண்மையில்லையென்றுஎவரேனும் ஆட்சேபிக்கமுடியுமா?

அக்கிராசனாதிபதியவர்கள் கிலாபத்து விஷயமாக முஸ்லிம்களுக்கு ஏற்பட்டிருக்கும் மனக்கொதிப்பைத் தணிக்காவிடில் விபரீதங்கள் விளையுமென்றும் அது கேவலம் மதசம்பந்தமான விஷயமல்லவென்றும், அது முஸ்லிம்களைமட்டில் பொருந்தியதல்லவென்றும், துருக்கியோடு செய்யப்பட்டிருக்கும் உடன்படிக்கையைமாற்றி முஸ்லிம்களுக்கு திருப்தியை உண்டுபண்ணாவிட்டால் ராஜாங்கத்திற்கே கெடுதியுண்டாகுமென்றும் சுட்டிக்காட்டி எச்சரிக்கைசெய்திருப்பதைக் கவர்ன்மெண்டார் கவனிக்க வேண்டுகிறோம். இந்தியாவில் தற்காலத்தில் அதிகாரம் செலுத்திவரும் அதிகாரவர்க்கத்தினர்கள் உள்ள வரையிலும் சீர்திருத்த சட்டத்தினால் யாதொருவிதமான பயனும் விளையாதென்றும் இந்தியர்களுக்குப் பூரா சுயஆட்சிகிடைக்கும் வரையில் தேசம் சுகத்தை அடையாதென்றும்; இந்தியாவிற்கு மதிப்பு ஏற்படாதென்றும் வெகுதெளிவாக எடுத்துக்காட்டியதை நாம் அங்கீகரிக்கிறோம்.

தேசத்திலுள்ள மகாஜனங்களுக்கு தலைவர்கள் செய்யவேண்டிய கடமைகளைப் பற்றியும் இரண்டொரு வார்த்தைகள் சொல்லியதை நம்மவர்கள் கவனிக்கவேண்டும். பாமரஜனங்களுக்கு ராஜரீக விஷயங்களில் இன்னும் அதிகமாக அறிவைப்புகட்டத் தலைவர்கள் முன்வரவேண்டுமென்றும், மகாஜனங்களின் வார்த்தைகளை அலட்சியம்செ

யாமல் மதிப்புடன் தம்மோடு அவர்களை நடத்திக்கொண்டு போகவேண்டுமென்றும் அக்கிராசனர்தமது பிரசங்கத்தில்விஸ்தரித்தது பாராட்டத்தக்கது.

மகாத்மா காந்தியடிகளின் ஒத்துழையாமைகொள்கையைப்பற்றிலாலதமதுசொந்த அபிப்பிராயத்தை வெளியிடவில்லை. மகாசபை எவ்விதமாகத் தீர்மானம்செய்கிறதோ அதற்குத்தேசத்திலுள்ளோர்கள்கட்டுப்படவேண்டுமென்கிற எண்ணம் அக்கிராசனருக்கிருப்பதாகத் தெரிகிறது. பொதுவாக அக்கிராசனரின் பிரசங்கத்தைப் படித்தவர்கள் தேசபக்திமேலிட்டுத் தேசசேவையே பிரதானமென்று கருதி, பொதுஜனசேவைசெய்ய முன்வருவார்களென்பது நிச்சயம். அக்கிராசனப் பிரசங்கத்தில் ஆங்காங்குப் பொதிந்துகிடக்கும் அரிய கருத்துக்களையும் யோசனைகளையும் மனதிலிருத்தி நம் தலைவர்கள் வேற்றுமைகளின்றித் தேசசேவை செய்வார்களென்று நம்புகிறோம். காங்கரஸ்நடவடிக்கைகளில் முக்கியமானது ஒத்துழையாமை விஷயம். இது பலமாகவாதிக்கப்பட்டுவருகிறது. நமது பத்திரிகை அச்சுக்குப் போகும் வரையில் அதன் முடிவு ஒன்று தெரியவில்லையாகையால் அவ்விஷயத்தைப் பற்றிய விவரங்களை அடுத்தப் பத்திரிகையில் வெளியிடுவோம்.

இடைநிலை விளக்கு

புத்திவந்ததுபோலும்!

கல்கத்தாவில் பிரசுரமாகும் ஸ்டேட்ஸ்மன் பத்திரிகையின் முட்டாள் ஆசிரியர் மிஸ்டர் ஜோன்ஸின் பிதற்றலைக் கவனிக்கும்போது “கழுதைக்குத் தெரியுமா? கற்பூரவாசனை” என்ற பழமொழி நமது ஞாபகத்துக்குவருகிறது. திலகரின் பாதத்தில் பட்டு விழுந்த தூசுக்குச்சமமில்லாத மிஸ்டர் ஜோன்ஸ் திலகர் இறந்த பிறகு அவரை வாயில் வந்தவாறு பிதற்றி நிந்தித்து எழுதியது இந்தியர்களின் ஆத்திரத்தை எழுப்பிவிட்டது. மிஸ்டர் ஜோன்ஸ் நடத்தும் ஸ்டேட்ஸ்மன் பத்திரிகையை எல்லோரும் பகிஷ்காரம் செய்யவேண்டுமென்று கல்கத்தாவில் கூக்குரல் கிளம்பியிருக்கிறது. இதை முன்னிட்டுச் சமீபத்தில் கூடிய கல்கத்தா கார்ப்பொரேஷன் கூட்டத்தில் ஓர் அங்கத்தினர் ஸ்டேட்ஸ்மன் பத்திரிகைக்குக் கார்ப்பொரேஷன் விளம்பரங்களை அனுப்பக்கூடாதென்று ஒரு தீர்மானம் கொண்டுவந்தனர். இத்தீர்மானம் மெஜாரிடி அங்கத்தினர்களால் நிறைவேற்றப்பட்டது. மிஸ்டர் ஜோன்ஸ் தாம் தமது பத்திரிகையில் எழுதியதை வாபீஸ் வாங்கிக்கொள்ளமுடியாதென்றும், ஆனால் அவர் இறந்தவுடன் அவ்வாறு எழுதியது சமய உசிதமல்லவென்று இப்போதுஉணர்வதாகவும், திலகரை இந்தியர்கள் மிகவும் உயர்வாகமதித்திருப்பதைத் தாம் அறியவில்லையெனவும் பல்லிளித்து மன்னிப்புக்கேட்டுக்கொண்டார். இவருக்குக் கொஞ்சமாவது புத்திவந்தது நல்லதென்றாலும், இவரைப்போன்ற இன்னும் சில அற்ப ஆங்கிலோ இந்தியப் பத்திரிகாசிரியர்களிருக்கிறார்கள். இவர்களெல்லோருக்கும் என்றுதான் புத்திவருமோ?

என்ன அக்கிரமம்?

மிஸ்டர் மாண்டேகு மிகவும் அக்கிரமமாகப்பேச ஆரம்பித்துவிட்டார். இராணுவச்சட்ட காலத்தில பஞ்சாபிலுள்ள சில இடங்களில் ஸ்திரீகள் துன்புறுத்தப்பட்டார்களென்றும், நாகரிக மனிதர்கள் செய்யக்கூடாத இழிசெயல்களை இராணுவத்தினர்கள் செய்தார்களென்றும் ஸ்ரீமதி ஸரோஜினி நாயுடு லண்டனில் கூடிய ஒரு கூட்டத்தில் குறிப்பிட்டதையும், அதற்கு மிஸ்டர் மாண்டேகு பதில்எழுதியதையும்நாம் முன்னர் நம் பத்திரிகையில் எழுதியதை நேயர்கள் அறிவார்கள். பார்லிமெண்டில் இது விஷயமாக ஓர் அங்கத்தினர் கேட்டகேள்விக்கு, மிஸ்டர் மாண்டேகு ஸ்திரீகள் அவமானப்படுத்தப்பட்டதாகச் சொல்லப்படுவது பொய்யென்றும், அவ்வாறுஏதோ அவமானப்படுத்தப்பட்டதாகச்சொல்லப்படும்ஸ்திரீகள் துன்மார்க்கர்களென்று இராஜப்பிரதிநிதியவர்கள் அறிவிப்பதாகவும் பதில் கூறியிருக்கிறார். இஃதென்ன அநியாயமான பதில்? ஸ்ரீமதி ஸரோஜினி நாயுடு கூஜ்ரான்வாலா ஜில்லாவிலுள்ளமணியன்வாலா என்னுமிடத்தில் ஸ்திரீகள் அனுபவித்த கொடுமைகளைக்குறிப்பிட்ட எழுதியதை மறைத்து அமிர்தசரஸில் சிலதுன்மார்க்க ஸ்திரீகளைப்பற்றிமிஸ்டர்மாண்டேகு குறிப்பிடுவானேன்? இதனால் இந்தியாமந்திரி மணியன்வாலாவில்பதிவிரதாஸ்திரீகளை இராணுவத்தினர் இம்சைசெய்ததுஉண்மையென்றுஒப்புக்கொள்கிறாரெனத்தெரிகிறது. உண்மையை உள்ளபடிஒப்புக்கொள்ளாமல்மிஸ்டர்மாண்டேகு நழுவிப்பேசிவருவது இந்தியர்களுக்குக் கோபத்தைக் கொடுக்குமென்பதை அவர் அறியட்டும்.

சும்மாவிருப்பார்களா?

லார்டு செம்ஸ்போர்டு மணியன்வாலாவிலிருக்கும் கௌரவமுள்ள ஸ்திரீகளை இராணுவத்தினர் இம்சைசெய்ததை அறியாதவர்போல் அமிர்தசரஸிலுள்ள விபசார ஸ்திரீகளைப்பற்றி ஏதேதோ இந்தியா மந்திரிக்கு அறிவித்திருக்கிறார். அமிர்தசரஸ் விபசார ஸ்திரீகளை இராணுவத்தினர் என்னவேண்டுமானாலும் செய்யலாம் போலும்! பிரிட்டிஷ் விபசார ஸ்திரீகளை இவ்வாறு ஜெர்மனியரேனும் பிரெஞ்சுக்காரரேனும் இம்சை செய்தால் லார்டுசெம்ஸ்போர்டும் இந்தியா மந்திரியும் சும்மாயிருப்பார்களா? ‘அல்லதுபிரிட்டிஷ்குடிமக்கள், ஏதோ விபசாரிகள் தவறுதலாகச் செய்துவிட்டார்கள்’ என்று பொறுமையுடனிருப்பார்களா? யுத்தம் நடந்த பொழுது பெல்ஜியத்தில்ஜெர்மனியர்கள் செய்த அக்கிரமங்களை லார்டுபிரைஸ்கோவையாக ஒருதுண்டுப்பிரசுரத்தில் வெளியிட்டபோது அதிலுள்ள அக்கிரமங்களைப்பார்த்துப் பிரிட்டிஷ்குடிமக்களும் அரசதந்திரிகளும் மனம்பதைத்து அலறினார்கள். சென்றவருஷம் பஞ்சாபில் செய்யப்பட்ட அநீதிகளையும் கொடுமைகளையும் காங்கரஸ் கமிட்டி ரிபோர்ட்டு மூலமாகப் பார்த்திருந்தும் பிரிட்டிஷார் இப்போது மௌனம் சாதிக்கக்காரணமென்னவென்று கேட்கிறோம்.

இவர்கள் ஜனத்தலைவர்களா?

வரிசையாக இரண்டு மூன்று(கல்கத்தா காங்கரஸ் உள்பட) காங்கரசுக்கு வேண்டுமென்றே போகாமல் நின்ற மிதவாதிகள் ஜனத்தலைவர்களா? வென்று இப்போது ஒரு கேள்வி கேட்கப்படுகிறது. இதற்கு ஒரு விடைதான் உண்டு. கஷ்டத்திலும் சுகத்திலும் ஜனங்களோடு ஜனங்களாய் நின்று அவர்கள் கோரிநிற்கிற லட்சியத்திற்குப் போராடி அவர்களை அழைத்து முன் செல்லுபவர்களே ஜனத்தலைவர்களாவார்களென்று கல்கத்தா மாஜிஜட்ஜ் ஸ்ரீமான் சௌதிரியவர்கள் கூறியதை நாம் ஆமோதிக்கிறோம். அக்கிராசனர் லாலா லஜபதியவர்கள் தேசத்தின் நெருக்கடியை உத்தேசித்து மிதவாதிகளுடைய ஒத்துழைப்பும் வேண்டுமென்று எவ்வளவோ வேண்டிமன்றாடிக் கடிதமெழுதியும் மிதவாத நண்பர்கள் காங்கரசுக்குவராமல் பராமுகமாய் ஒதுங்கி நின்றுவிட்டது யாவருக்கும் உண்மையாகவே வருத்தத்தைக் கொடுக்கும். ஜனங்கள் செல்லும் வழி தவறென்று ஒதுக்குப் பக்கங்களிலுள்ள பிரசங்கமேடைகளிலும் பத்திரிகைகளிலும் பறைபடித்தமிதவாதிகள் காங்கரசுக்கு வந்தல்லவோ தங்களுடைய அபிப்பிராயங்களை வெளியிட்டுஜனங்கள் முன்னேறிச் செல்லும் வழியிலிருக்கும் ஆபத்துக்களைத் தைரியமாக அறிவித்திருக்கவேண்டும். இவ்வாறு தங்களுடையகடமையைச் செய்யத் தவறிவிட்டவர்கள்—ஒருமுறை இருமுறையல்ல—எங்ஙனம் ஜனத்தலைவர்களாவார்கள்? இச்சந்தர்ப்பத்தில் அன்னிபெஸன்ட் எவ்வளவோ வெறுக்கப்பட்டாலும், பரிகாசம் செய்யப்பட்டாலும் மனோதைரியம் குன்றாமல் காங்கிரஸுக்கு விஜயம் செய்து உபந்யாசம் புரிந்தது பாராட்டத்தக்கதாகும். மிதவாதிகள் அன்னிபெஸன்டைப் பார்த்தேனும் அறிந்து நடக்க மாட்டார்களா?

கண்ணம்பாடி அணை

கண்ணம்பாடி அணை விஷயமாக மைசூர் திவானும், மைசூர் பிரிட்டிஷ் ரிஸிடென்டும் ஸிம்லாவுக்குப் போய் இந்தியா கவர்ன்மெண்டாரோடு கலந்து யோசிப்பரென்று தெரிகிறது. இவர்களுடைய யோசனையால் ஒரு முடிவு ஏற்படாதென்றும் இதைப் பற்றிவிசாரிக்க ஒரு விசாரணைக் கமிட்டி ஏற்படுத்தும்படி நேரிடுமென்றும் சொல்லப்படுகிறது. இன்னும் எவ்வளவு காலந்தான் தஞ்சை திரிசிராப்பள்ளி மிராசுதார்கள் அசிரத்தையாயிருப்பார்கள் பாபநாசத்தில் கூடிய ஜில்லா மகாநாட்டில் கண்ணம்பாடி அணை விஷயமாக இந்த இரண்டு ஜில்லா மிராசுதார்களின் பிரதிநிதிகள்

விசேஷ காங்கரஸ்.

கல்கத்தாவில் கூடியது.

லஜ்பதியின் உருக்கமான பிரசங்கம்.

இம்மாதம் 4-ந்தேதி பகல் ஒரு மணிக்குக் கல்கத்தாவில் இதற்கென்று நிர்மாணிக்கப்பட்ட பிர்ம்மாண்டமான பந்தலில் கூடியது. இதன் முக்கிய நோக்கம் கிலாபத் விஷயம் பஞ்சாப் விஷயம் சீர்திருத்த விஷயம் ஆகிய இந்த மூன்று முக்கிய விஷயங்களில் கவர்ன்மெண்டார் செய்திருக்கும் அநீதிகளைக் கண்டித்து அவைகள் உடனே மாற்றப்பட்டு நியாயம் செய்யப்படவேண்டுமென்பதற்காகும். காங்கரஸ் கூடியதும் வந்தேமாதரம் பாட்டுகள் வங்காள ஸ்திரீகளால் பாடப்பட்டன. பிறகு வரவேற்புக் கூட்டத் தலைவரான ஸ்ரீமான் பி. சக்கரவர்த்தி யவர்கள் தமது வரவேற்புப் பிரசங்கத்தைச் செய்து அக்கிராசனரையும் பிரதிநிதிகளையும் வரவேற்றினர்.

அக்கிராசனர்.

அக்கிராசனர் லாலாலஜபதிராய் அவர்கள் தமது அக்கிராசனப் பிரசங்கத்தை 51 பக்கம் கொண்டுள்ள ஒரு புத்தகரூபமாக அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார். அக்கிராசனர் பிரசங்கத்தில் பெரும்பாலும் எல்லாவிஷயங்களும் குறிப்பிடப்பட்டிருப்பதால் அவைகளில் நேயர்கள் கவனிக்கவேண்டிய அத்தியாவசியமான வைகளைமாத்திரம் கீழேகுறிப்பிடுகிறோம். அவைகளை நம் சகோதரர்கள் ஊன்றிக் கவனிப்பார்களாக:—

இனி நமது அரசியல் இயக்கத்தில் கெஞ்சிக்கேட்டல் விண்ணப்ப மனுப்புதல் தீர்மானம்செய்தல் முதலியவைகளை கொண்டு நாம்திருப்தியடைதல்கூடாது. அதிகாரிகளைக்கெஞ்சிகேட்கும்காலம் கடந்துவிட்டோம். தீவிரக்கிளர்ச்சி செய்து நாம் அதிகாரிகளைக் கட்டாயப்படுத்தி வேண்டியவைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் முரட்டுச்செய்கைகள்கூடா. நம்தேசம் தற்காலம்மிகுந்தநெருக்கடியான நிலையிலிருக்கிறது. ஆங்கிலோ இந்தியப்பத்திரிகைகள் நாம் செய்யும் போராட்டத்தைப்புரட்சிக்கு அடிப்படையென்றுகூறுகின்றன. இப்படிக் கூறுவதைக்கண்டு நான் பயப்படமாட்டேன். சிலர் மிகவும் பயந்து விடுகின்றனர். நாம் பெரிய புரட்சியின் இடையில் வசித்துவருகிறோம். எல்லாத்துறைகளிலும் புரட்சி உண்டாயிருக்கிறது. இதை ஒருவரும் ஒளிக்கமுடியாது. புரட்சியை நாம் விரும்புவதில்லை. நாம் மெதுவாக் காரியங்களைச் செய்யும் குணமுடையவர்கள். ஆனால் துரிதமாக நடக்கவேண்டுமென்று தீர்மானித்து விட்டால் நாம் வேகமாகச் செல்வோம். ஜீவப்பிராணிகள் எல்லாம் அதன்தன் வாழக்கையில் புரட்சிக்காலத்தைக் கடந்து செல்லவேண்டும். தப்பிக்கமுடியாது. இப்போது இந்தியாவில் ஏற்பட்டிருக்கும் புரட்சிக்கு நம்மையாளுவோரேஜவாப்தாரியாவார்கள். இந்தப்புரட்சிக்காலத்தில் அமைதியாகவும் சமாதானமாகவும் நாம் கோரியவைகளை அடையப்பார்க்கிறோம். நம்மை யாளுவோரில் சிலர் நம்மை யடக்கிப் பயமுறுத்தியாண்டுவிடலாமென்று நினைத்திருக்கின்றனர். இதுமுடியாதகாரியமென்று அவர்கள் அறியவேண்டுகிறேன்.

லார்ட்வில்லிங்டனைப் பார்க்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. இந்தத் தீர்மானத்தின்படி நம் ஜில்லா தலைவர்கள் கூடியசிக்கிரத்தில் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வார்களென்று நம்புகிறோம்.

திலகர்பிரான்

நம்தேசத்தின் நெருக்கடியான சமயத்தில் லோகமான்ய பாலகங்காதர திலகர் நம்மை விட்டுப் பிரிந்து விட்டது சகிக்கமுடியாத வருத்தமாகும். தேசத்திற்கு ஒரு பெரிய நஷ்டமேற்பட்டு விட்டது. திலகரின் தேசபக்தியும் உயர்ந்த அறிவும் கொண்டாடத்தக்கன. இவரது பிரிவால் இந்தியா முழுவதும் துக்கசாகரத்தில் மூழ்கியிருக்கிறது. எல்லாவற்றையும் விட இந்தியன் நாஷனல் காங்கரஸ் ஒருபெரிய அறிவாளியை இழந்து விட்டது காங்கரஸ் வளர்ச்சிக்கு உதவியாயிருந்தவர் இறந்துவிட்டார். இவரது பிரிவாற்றுமையை இந்தக் காங்கரஸ் ரிகார்டு செய்யவேண்டுவது முதற்கடமையாகும்.

பஞ்சாப் விஷயம்

அக்கிராசனர் பஞ்சாபில் நடந்த அக்கிரமங்களுக்கும் வெள்ளையர்கள் செய்த அநியாயங்களுக்கும் காரணர் ஸர்மைகல் ஓட்வியரென்றுகூறி, அவர் மீது பன்னிரண்டு குற்றங்கள் சுமத்திக் குறிப்பிட்டார். பிறகுயுத்தத்திற்கு முன்பு பஞ்சாபிருந்த நிலைமையையும் யுத்தகாலத்திலிருந்த நிலையையும், ஓட்வியர் செய்த அடக்குமுறைகளையும் வருணித்து விட்டு அச்சுச்சட்டக் கொடுமைகளையும், இந்தியப் பாதுகாப்புச் சட்டம் அநியாயமாக உபயோகப்பட்டதையும் பத்திரிகைகள் ஒரு மாகாணத்திலிருந்து மற்றொரு மாகாணத்திற்கு வரக்கூடாதென்று தடுக்கப்பட்டதையும் குறிப்பிட்டுப் பேசினார். இவ்வாறு அக்கிராசனா தமது அக்கிராசனப் பிரசங்கத்தில் சுமார் 40 பக்கங்கள் வரையில் பஞ்சாப விஷயமாகவே விவகரித்திருக்கிறார். பஞ்சாபில் அரசியல் இயக்கம் எவ்வாறு அடக்கப்பட்டதைப்பற்றியும் பஞ்சாப் தலைவர்கள் வெளியேற்றப்பட்டதற்குக் காரணம் ஓட்வியரின் அடக்குமுறையென்பதைப்பற்றியும், இராணுவச் சட்டம் ஜலியன் வாலாபாக் படுகொலை முதலியவைகளைப் பற்றியும் ஹண்டர் கமிட்டி ரிபோர்ட்டைப்பற்றியும் சாங்கோபாங்கமாகப் பேசினார். ஸர்மைகல் ஓட்வியர்தண்டிக்கப்படவேண்டுமென்றும், லார்ட்செம்ஸ்போர்டு தம்உத்தியோகத்தினின்று விலகிக்கொள்ளவேண்டுமென்றும் அபிப்பிராயம் கொடுத்துவிட்டுப்பஞ்சாப் சம்பவத்திற்குப்பிறகு இந்தியர்களுக்குள் ஒற்றுமை ஏற்பட்டிருப்பது சந்தோஷிக்கக் கூடியதென்றும் இது இனிஅழியாதென்றும், ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையை விருத்திசெய்வதே இந்தியர்களுடைய நோக்கமாயிருக்கவேண்டுமென்றும், இந்தியர்கள் குடியேற்ற நாட்டினர்களைப் போல முழுசுயஆட்சி பெறவேண்டுமென்றும் இதற்குக் குறைந்த அரைகுறையான ஆட்சிகூடாதென்றும் வற்புறுத்திக்குறிப்பிட்டார். முடிவில் பஞ்சாபவிஷயமாகச்சிரமம் எடுத்துக்கொண்டுழைப்பம் செய்த கனவான்களெல்லோருக்கும் வந்தனம் கூறிவிட்டுக் கிலாபத் விஷயத்தைப்பற்றி அறிவித்தார்.

கிலாபத் விஷயம்.

இந்த விஷயம் இந்தியர்களுடைய மனதைக் கவர்ந்திருக்கிறது. முஸ்லிம்களின் கலிபாவான சுல்தானின் ராஜ்யங்கள் பிடுங்கப்பட்டு அவருடைய நிலை திண்டாட்டத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. பிரிட்டிஷ் அரச தந்திரிகள் யுத்த காலத்தில் தாங்கள் கொடுத்த வாக்குறுதிகளை அலட்சியம் செய்துவிட்டு நியாயத்திற்கு மாறாக நடக்கத் தலைப்பட்டிருக்கிறார்கள். முஸ்லிம்கள் விரும்பிய பிரகாரம் கிலாபத் விஷயம் முடிவு செய்யப்படவேண்டுமென்பதை இந்தியர்கள் எல்லோரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இது நிற்க, பிரிட்டிஷார் ஆசியாவில் தங்களுடைய ராஜ்யங்களை விஸ்தரிப்பதானது இந்தியாவின் க்ஷேமத்திற்கு விரோதமாகும். இந்தியத் துருப்புகள் ஈஜிப்ட், ஸிரியா, பர்ஷியா. அராபியா முதலிய விடங்களில் அங்காட்டு ஜனங்களின் உரிமைகளைப் பறிமுதல் செய்வதற்கு உபயோகப்படுத்தப் படுகின்றன. இவ்வழக்கத்தை நாம் அடியோடு வெறுத்துக் கண்டிக்கவேண்டும். யுத்தம் முடிந்ததும் பிரிட்டிஷ் குடியேற்ற நாட்டுத் துருப்புகள் தங்கள் ஜன்ம தேசத்துக்குத் திரும்பிவிட்டன. இந்தியத் துருப்புகள் ஏன் இந்தியாவுக்குத் திரும்பவில்லை? பிரிட்டிஷாரும் பிரஞ்சுக்காரரும் துருக்கியின் நாடுகளைப் பகிர்ந்து கொள்வதானது அக்கிரமமாகும். துருக்கியைக் கேளாமல்பிரிட்டிஷ், பிரஞ்சு, இதாலி முதலிய தேசங்கள் ஒன்றிற்கொன்று ஒப்பந்த உடன்படிக்கை செய்துகொண்டிருக்கின்றன. சுல்தான் அநேதாகதியாக விடப்பட்டிருக்கிறார். ஹைதராபாத் நிஜாமைக்காட்டிலும் துருக்கி சுல்தான் தாழ்ந்த அந்தஸ்திலிருக்கிறார். ஆகவே, கிலாபத் விஷயமாக இந்துக்களும் முஸ்லிம்களும் ஒன்று சேர்ந்து தாங்கள் கோரியவைகள் நிறைவேறுவதற்குக் கிளர்ச்சிகள் செய்யவேண்டும்.

சீர்திருத்தம்.

சீர்திருத்த விதிகள் சீர்திருத்த சட்டத்தைப் பாழ்படுத்திவிட்டன. மாண்டேகு செம்ஸ்போர்டு ரிபோர்ட்டைவிட சீர்திருத்த சட்டம் ஒருவிதத்திலும் உயர்வானதல்ல. அதிகார வர்க்கத்தினர்கள் வேண்டுமென்றே இவ்வாறு செய்திருக்கிறார்கள். நமக்கு அரை சீர்திருத்தமும் கால் சீர்திருத்தமும் வேண்டுவதில்லை. கொடுத்தால் முழு சீர்திருத்தம் கொடுக்கவேண்டும். அதிகார வர்க்கத்தினர்கள் கொடுப்பவைகளெல்லாம் முலாம்பூசினவைகளாகும். நாம் கோரி நிற்பவைகளைப் பெறுவதற்கு நாம்வித்தியா சங்களின்றிக் கேட்கவேண்டும்.

ஒற்றுமையாமை.

இவ்விஷயமாக எங்கும் பேசப்பட்டும் வாதிக்கப்பட்டும் வந்திருக்கிறது. ஒற்றுமையாமையைப்பற்றி அக்கிராசனர் ஹோதாவில் ஒருவிதமான அபிப்பிராயம் கூற எனக்கு விருப்பமில்லை. இதற்குச்சாதகமாகவும் பாதகமாகவும் பேசுவோர்கள் கூறுபவைகளைக் கேட்டுக் காங்கரஸ் சபையை நடத்த உத்தேசித்திருக்கிறேன். ஆட்சேபம் செய்யப்படாத விஷயத்தை மாத்திரம் அக்கிராசனர் பேசலாமென்று பரம்பரையான அனுஷ்டானமிருந்து வருகிறது இவ்வனுஷ்டானத்திற்கு விரோதமாக நான் போகத் தயாராயில்லை.

முடிவுரை.

பொதுவாக ஜன நாயக ஆட்சி முறையில் கொடுங்கோலாட்சிமிகவும்கெட்டது. அதுஏதேச்சாதிபத்திய ஆட்சியைவிட கெட்டதென்னலாம். உலகத்தில் ஜன நாயக ஆட்சியெல்லாம் சரியான ஆட்சியுல்ல. உலகத்திலுள்ள பல தேசத்து ஜன நாயக ஆட்சி முறைகளைப் படித்திருக்கிறேன். சில ஸ்திரீ புருஷர்கள் ஜன நாயக ஆட்சி முறையில் நல்லவர்களாயிருந்து தங்களைப்போல் பிற ஜனங்களும் வாழவேண்டுமென்று கருதினாலும் அவர்கள் பொருட்டு அந்த ஜன நாயக ஆட்சியை மேலானதென்று கொள்ளக்கூடாது. எப்போதும் அவ்வந்தத் தேசத்து ஜன நாயக ஆட்சியிலிருப்பவர்கள் முதன்மையாகத் தங்கள் சுய நலத்தைப் பிரதானமாகக் கருதுபவர்களாயிருக்கிறார்கள். ஆனது பற்றி ஏகாதிபத்தியக் கொள்கைக்காரர்கள் ஜனநாயக ஆட்சியைப்பற்றி இளிவாயாகப் பேசினால் இவர்கள் கூறுபவை நம்பாதேயுங்கள். சமீபத்தில் லார்டு சபையில் நடந்த பஞ்சாப் விஷயவாதம்உங்களெல்லோருக்கும்ஒரு பாடமாக விருக்குமென்று நம்புகிறேன். பிறரை நம்பினால் உங்கள் காரியம் கைகூடிவிடுமென்று நம்பியிருத்தல் கூடாது. நீங்கள் செய்யும்

காரியங்களில் உங்களுக்கு நம்பிக்கை வேண்டும் நாம் மெதுவாக முன் செல்லலாம். அதனால் பாதகமில்லை. ஆனால் பிறர் வார்த்தைகளை நம்பி மோசம் போதல் கூடாதென்றே நான் உங்களை கேட்டுக்கொள்ளுகிறேன். உங்களுடைய பொது ஜன அபிப்பிராயம் எவ்வளவுக்கெவ்வளவு பலமாக விருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு நீங்கள் கோரி நிற்கிற காரியம் நிறைவேறும். நமது வெற்றி நாம் உழைக்கும் உழைப்பைப் பொறுத்திருக்கிறது. ஜனத்தலைவர்கள் சுயநலமற்றவர்களாக விருத்தல் வேண்டும். சுயநலமற்றுத் தேச காரியத்தை முதன்மையாக வைத்துக்கொண்டு உண்மையாக உழைத்து வந்தால் நாம் கோரிய லட்சியம் சீக்கிரம் சித்தி பெறும்.

தஞ்சை ஜில்லா

எலிமெண்டரி ஸ்கூல் உபாத்தியாயர்கள் சங்கம்.

ஷெ சங்கத்தின் இரண்டாவது மீட்டிங்கு 5-9-20 ல் விஜயபுரம் மகா-ா-ஸ்ரீ ராமனாதய்யரவர்கள் ஸ்கூலில் கூடிற்று சில தாலுக்காக்கள் தவிர மற்ற எல்லாத் தாலுக்காப் பிரதிநிதிகளும் வந்திருந்தார்கள். பட்டுக்கோட்டை திருக்காட்டுப்பள்ளி, வேதாரணியம முதலிய விடங்களிலிருந்தும் மெம்பர்கள் சிரமத்தைப் பாராமல் வந்திருந்தது. எல்லோருக்கு மிகுந்த ஊக்கத்தை அளித்தது. சமரஸபோதினி அஸிஸ்டெண்டு எடிடர் மகா-ா-ஸ்ரீ சேஷாத்திரி சர்மா அவர்களும், கும்பகோணம டிரயினிங் மாஸ்டர் அவர்களும் நம் வேண்டுகோளுக் கிணங்கி விஜயம் செய்திருந்தார்கள். நாகப்பட்டணம டிவிஷனல் அஸோஸியேஷன் காரியதரிசி அமிர்த அய்யரவர்கள் அக்கிராசனம் வகித்தார்.

சங்கத்திற்காகத தயாரிக்கப்பட்டிருந்த சட்ட திட்டங்கள் வாசிக்கப்பட்டு சிற்சில திருத்தங்களும் புதிதாய் சேர்க்கப்பட்டும ஓர் மனதாய் அங்கீகரிக்கப் பட்டன. ஷெ விஷயத்தில் இரண்டு மணி நேரம் விவாதம் நடந்தது எல்லோரும் கலந்து அபிப்பிராயம் கொடுத்தது வியக்கத் தக்கது.

சங்கம் ஸ்தாபிக்கப்படாத தாலுக்காக்களில் சங்கம் ஸ்தாபிக்கப்படவேண்டியநிமித்தம் பேசப்பட்டது. தஞ்சாவூர் தாலுக்கா திருக்காட்டுப்பள்ளி ஸ்ரீமான் கிருஷ்ணராவ் அத்தாலுக்காவில் உடனே ஸ்தாபிக்க ஏற்பாடு செய்வதாய் ஒப்புக்கொண்டு விட்டார். அம்மாப்பேட்டை சங்கப் பிரதிநிதி ஸ்ரீமான் கோவிந்தசாமி பிள்ளை ஷெ சங்கம் ஸ்தாபிக்க ஒப்புக் கொண்டார். ஜில்லா கான்பரன்சு செகிரிடரி மாயவரம் சீர்காழி தாலுக்காக்களுக்குப் போய் பிரசார வேலை செய்வதாய் ஒப்புக்கொண்டார். மற்ற தாலுக்காக்களுக்கும் தக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஜில்லா கான்பரன்சுக்கு அக்கிராசனர் தெரிந்தெடுக்கும் விஷயம் ஆலோசனைக்கு விடப்பட்டது. எல்லோரும் 3 கனவான்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அக்கிராசனம் வகிக்க ஒருவர் ஒப்புகொண்டவுடன் அதனம் சமரஸ போதினி மூலமாய் தெரிவிக்கப்படும். கான்பரன்ஸ் ஏற்பாடுகளில் சில பாக்கியிருப்பவைகளும் பின்னால் தெரிவிக்கப்படும்.

கும்பகோணம் ரிஸப்ஷன் கமிட்டியார் மெம்பர்களுக்கு ரூ 2-0-0 வீதமும் டெலிகேட்டுகளுக்கு ரூ 1 வீதமும் விசிட்டர்களுக்கு 4 அணா வீதமும் ஏற்பாடு செய்திருக்கின்றனர். டிக்கெட்டுகள் சீக்கிரம் தயாரித்த எல்லாக் காரியதரிசிகளுக்கு அனுப்பும்படி ஏற்பாடாயிற்று. அனேகமாய் கான்பரன்சு 2 நாள் நடக்கும். சேலம் முனிஸிபாலிட்டியில் 6 ரூ சம்பளத்தோடு சேர்த்துக் கொடுக்க உத்தரவாயிருக்கிறதென்பது தெரிவிக்கப்பட்டது. மெமோரியல்கள் விஷயம் கும்பகோணம் Mr R வெங்கடராமய்யர் அவர்கள் தெரிவித்தார்கள். எல்லாச் சங்கங்களும் சமரஸ போதினி பத்திரிகையைத்தருவிக்கவேண்டுமென்று தீர்மானிக்கபட்டது. கான்பரன்ஸில் நிறைவேற்ற வேண்டிய தீர்மானங்கள் காப்பி எல்லாத் தாலுக்கா சங்கங்களில் பாஸ் செய்யப்பட்ட பின் கான்பரன்ஸ்செகிரிடெரி கும்பகோணம் Mr. R. வெங்கடராமய்யருக்கு அனுப்பலாம். ஒவ்வொரு தாலுக்கா சங்கம் தங்கள் கிளைச் சங்கத்தாரோடு கலந்துகொண்டு ஜில்லா சங்கத்தில் கட்டாயம் இணைக்கப்பட வேண்டும். பிரவேசக் கட்டணம் ரூ 1 ம், பிரதி ஆறு மாதத்திற்கு 1ரூ வீதமும் ஜில்லாசங்கக் காரியதரிசிக்கு அனுப்பிப் பதிவு செய்து கொள்ள வேண்டும் எனத் தீர்மானிக்கப் பட்டது.

பிறகு சமரஸ போதினி அஸிஸ்டெண்டு எடிடர் மகா-ா-ா ஸ்ரீ சேஷாத்திரி சர்மா அவர்கள் நம் சங்க முன்னேற்றத்திற்கு எவ்வாறு வேலை செய்ய வேண்டுமென்பதை மிகவும் தெளிவாய் இதாரணங்களை ஒப்பிட்டுப்பேசினர். அவர் கூறியது எல்லோருக்கும் சிறந்த புத்திமதியாகவே இருந்தது.

கடைசியாக அக்கிராசனர் மகா-ா-ஸ்ரீ அமிர்தமய்யரவர்களுக்கும், எடிடர் மகா-ா-ா-ஸ்ரீ சர்மா அவர்களுக்கும் இதர கனவான்களுக்கும், கட்டடங்கொடுத்து உதவிய மகா-ா-ா ஸ்ரீ ராமனாதய்யரவர்களுக்கும் வந்தன மளிக்கப்பட்டு மீட்டிங்கு முடிந்தது.

B. பில்லுராவ்.
காரியதரிசி.

ஜில்லா செய்தி.

ஏற்கனவே தஞ்சை முனிசிபல் வைஸ் சேர்மன் ஸ்தானத்தை வகித்து வந்த மிஸ்டர். பி. வேங்கடநாஸய்யாவை சேர்மன் ஸ்தானத்திற்கு கவுன்ஸிலர்கள் தெரிந்தெடுத்திருக்கின்றார்கள்.

*　　*

கும்பகோணம் நகர தாசில்தார் ஸ்ரீ சபாபதி முதலியார் பட்டுக்கோட்டைக்கு மாற்றப்பட்டதால் அவர் ஸ்தானத்தில் ஸ்ரீ ஜோசாப் தானியல் அமர்ந்து வேலை பார்ப்பார்.

*　　*

கும்பகோணம் ஜவுளி வியாபாரியான விசுவலிங்கஞ்செட்டியாரை ஆடுதுறையில் கொலை செய்த விஷயமாகக் குற்றவாளிகளை சம்மாஜிஸ்ரேட் கோர்ட்டார் விசாரணை செய்து தஞ்சை (செஷனுக்கு) குற்ற விசாரணை ஸ்தலத்துக்கு விசாரணைக்கு அனுப்பிவிட்டார்கள்.

*　　*

மன்னார்குடி தாலுகா போர்டு, திருத்துறைப்பூண்டி ரேஞ்சின் மெம்பர் ஸ்தானத்திற்கு எலக்ஷன் நடந்ததில், நெடும்பலம் மிஸ்டர். என். ஆர். சாமியப்ப முதலியார் மெம்பராகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கின்றார்.

*　　*

பாடசாலை இன்ஸ்பெக்டராயிருந்து பென்ஷன் பெற்று வந்த மிஸ்டர். வி. ஆர். வேங்கட்டராமய்யர் சென்ற சனிக்கிழமை தஞ்சையில் இறந்து விட்டார்.

*　　*

தஞ்சை ஜில்லா போர்டு கூட்டம் இம்மாதம் 4-ந்தேதி சனிக்கிழமை பிற்பகல் மூன்று மணிக்குக் கூடியது. அக்கூட்டத்தில் பல இலாகாவிலுள்ள குமாஸ்தாக்களுக்குச் சம்பளம் உயர்த்தப்பட்டது. சிப்பந்திகளுக்கு முன்பிருந்த அலவன்ஸ் சம்பளத்தோடு சேர்த்துக்கொடுக்கப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. சென்ற ஏப்ரல் மாதம் முதல் இந்த அதிகச் சம்பளம் கொடுக்கப்படுமென்று அறிவிக்கப்பட்டது.

மருவூரில் இம்மாதம் 2-ந்தேதி ஒரு கூட்டம் கூட்டி அவ்வூர் வாசிகள் ஸர். பி. எஸ். சிவஸாமி ஐயருக்கு வோட் கொடுப்பதைப்பற்றி யோசித்தார்கள். பிறகு அவர் காங்கரஸைவிட்டுப் பிரிந்து அதை அவமதித்து வருவதால் அவருக்கு வோட் கொடுக்கக்கூடாதென்று தீர்மானித்தார்களென்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

*　　*

இம்மாதம் 4-ந்தேதி ஸர். பி. தியாகராய செட்டியார் தஞ்சைக்கு விஜயம் செய்து, பிராமணரல்லாதார்களுக்கு ஓர் உபந்நியாசம் புரிந்தார். அதில் பிராமணர்களுக்கு வோட்கொடுக்கக்கூடாதென்றும், அவர்கள் மந்திரி ஸ்தானங்களுக்கு நியமிக்கப்படாதவாறு செய்யவேண்டுமென்றும் சொன்னார். அக்கிராசனம் வகித்த பாப்பாநாடு ஜமீன்தார் பிராமணர்களைத் தூஷியாமல் பிராமணரல்லாதாரின் முன்னேற்றத்திற்கு வேலை செய்யவேண்டுமென்று அறிவித்தார்.

*　　*

இம்மாதம் 9, 10, 11ந் தேதிகளில் கும்பகோணம் மிஸ்டர் ஸ்ரீநிவாசய்யர் (பி. ஏ. எல் டி.) தஞ்சாவூர் பெஸன்ட் லாட் ஜில் பிரதிதினம் மாலை 6-15 மணிக்கு ஸர் ஜே. ஸி போஸின் புதிய ஆராய்ச்சிகள், சுகாதார விஷயங்கள், கல்வியில் புதிய சகாப்தம் என்னும் மூன்று விஷயங்களைப் பற்றி முறையே உபந்நியாசம் செய்வார்கள். முதல் நாள் பிரசங்கத்திற்கு அடிஷனல் சப் ஜட்ஜ் மிஸ்டர் ஜி. ஆர் சுப்பராயரும் இரண்டாம் நாள் சப் ஜட்ஜ் மிஸ்டர் கே. எஸ வேங்கடாசல அய்யரும் மூன்றாம் நாள் அடிஷனல் சப்ஜட்ஜ் மிஸ்டர் பி. சுப்பராவும் அக்கிராசனம் வகிப்பார்கள்.

ஏல நோட்டீஸ்.

சுமார் 60,000 சவுக்கு மரங்கள் கீழ் நிலமுள்பட ஏலம்.

தஞ்சாவூர் டிஸ்டிரிக்ட்டு கோர்ட்டு I. P. 19/20 ன் ஷெடியூலில் கண்ட மன்னார்குடியிலிருந்து பட்டுக்கோட்டை போகும் ரோடுக்கு அடுத்த கீழ்புறத்தில் இரண்டு வேலி சொச்ச நிலத்தில் 8-10 வயதுள்ள சுமார் 60000 மரங்கள் கீழ் நிலமுள்பட 1920 ஹ செப்டம்பர் மீ 18-19 தேதிகளில் மன்னார்குடி அக்கிராரம் முதல் தெருவில் பகிரங்கமாய் ஏலம் போடப்படும்.

T. கோதண்டராமய்யங்கார்.
ஸ்பெஷல் ரிசிவர்.

அகில இந்தியக்கிலாபத் கான்பரன்ஸ்.

இக்கான்பரன்ஸ் 5-ந்தேதி காலை காங்கரஸ் பந்தலில் கூடிற்று. மௌலானா அப்துல் மஜீத் அக்கிராசனம் வகித்து உருக்கமான பிரசங்கம் செய்தார். பிறகு, இந்திய முஸ்லிம்கள் தங்களுடைய மதக்கடமையை நிறைவேற்ற வேண்டியிருப்பதால் ஒத்துழையா தர்மத்தை அனுஷ்டிக்கவேண்டுமென்றும், ஹிஜரத் யாத்திரையை மத்திய கிலாபத் கமிட்டியார் மேற்பார்வை பார்த்து மகஜரின்களுக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துகொடுக்கவேண்டுமென்றும் முஸ்லிம் துருப்புகளை இஸ்லாமியா தேசங்களில் வைத்துக்கொண்டிருப்பது கூடாதென்றும் தீர்மானங்கள் செய்யப்பட்டன. பிறகு ஆப்கன் அமீருக்கு வந்தனம் செலுத்தி கிலாபத் இயக்கத்தைச் சரிவர நடத்த 30 லட்சம் ரூபா வசூலிக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

லங்கையில் இந்தியக் கூலிகள்

படும் கஷ்டங்கள் சொல்ல முடியா.

ஸ்திரீகள் கதறுகிறார்கள்.

(நமது சொந்த நிருபரிடமிருந்து)

கொழும்பு 1—9—20.

"பட முடியா தினித் துயரம் பட முடியாதரசே; பட்டதெல்லாம் போதுமென்று" ஒரு பெரியோர் திருவாய் மலர்ந்தருளியது என் ஞாபகத்திற்கு வருகிறது. என்செய்வது? லங்கையிலுள்ள இந்தியக் கூலிகள் ஐரோப்பியத் தோட்டக்காரர்களிடத்தில் பட்டகஷ்டங்களும் துயரங்களும் போதாவோ? அவர்கள் இன்னுமா துயரப்பட வேண்டும்? ஸிலோன் கவர்ன்மெண்டாருக்குக்காது கண்ணில்லையோவென சில சமயங்களில் நான்சந்தேகிக்கிறேன். நான் மாத்திரமல்ல; என்னைப்போல் ஆயிரக் கணக்கான பெயர்களும்சந்தேகப்படுகிறார்கள். ஸிலோன் கவர்ன்மெண்டார்தான் நிஷ்டையிலிருக்கின்றனர். இந்தியா கவர்ன்மெண்டாரும் முக்கியமாக சென்னைக் கவர்ன்மெண்டாரும் கூடவா நிஷ்டையிலிருக்க வேண்டும்? இந்தியக் கூலிகளின் நிலை பரிதாபகரமாயிருக்கிறது. சுமார் 150 கூலிகள் (ஸ்திரீகள் குழந்தைகள் புருஷர்கள் உள்பட) பதுலை ஜில்லாவிலுள்ள ஒரு காப்பித் தோட்டத்திற்கு ஏமாற்றி அழைத்துக்கொண்டு வரப்பட்டார்கள். அவர்கள் சேணியர்கள். நெசவுத் தொழில் வேலை கொடுக்கப்படுமென்றும், இந்தியாவில் அவர்கள் சம்பாதிப்பதை விட அதிகமாகச் சம்பளம் வழங்கப்படுமென்றும் ஆசை வார்த்தைகள் காட்டி அழைத்துக்கொண்டு வரப்பட்டார்கள். காப்பித் தோட்டத்தில் கூலிகளாக அமர்ந்ததும் இவர்கள் வேறு வேலைகள் கொடுக்கப் பட்டார்கள். இந்தியக் கூலிகள் கொஞ்சம் முணு முணுத்தார்கள். இவ்வாறு சில நாட்கள் கழிந்தன. சம்பளமும் தாங்கள் எதிர் பார்த்தபடி கொடுக்கப்பட வில்லை யென்பதை அறிந்த இந்தச் சேணியர்கள் ஒரே பிடிவாதமாக இந்தியாவுக்குத் திரும்பிப்போக எத்தனித்தார்கள். எஸ்டேட் மானேஜர் எவ்வளவோசொல்லிப்பார்த்தார். பலிதமாகவில்லை. சேணியர்கள் சிறிதும் இணங்காது இந்தியாவுக்குத் திரும்பிப்போய் விடவேண்டுமென்று தீர்மானித்து பலிகென்டென்டா வரை பிரயாணம் செய்யலானார்கள்.

போலீசார் தலையிடல்.

எஸ்டேட் மானேஜர் வழியொன்று மில்லையென்பதை அறிந்து போலீசாரின் உதவியை நாடி எஸ்டேட்டை நோக்கி இவர்களைப் பயமுறுத்தி அழைத்து வந்தார்கள். பதுலை என்ற இடத்திற்கு வந்து சேர்ந்ததும் கோர்ட் காம்பவுண்டில் இவர்கள் நிறுத்தப் பட்டார்கள். மாஜிஸ்ட்ரேட் வெகு தூரம் முயன்று எஸ்டேட்டுக்குத் திரும்பி போய்விட வேண்டுமென்று கூலிகளுக்குக் கட்டளையிட்டார். கூலிகள் என்ன செய்வார்கள்? பாவம்! கோ வென்று கதறிக் கூக்குரலிட்டு வாயிலும் வயிற்றிலும், அடித்துக்கொண்டு இனி "நாங்கள் இறந்தாலும் இறப்போம் எஸ்டேட்டுக்குத் திரும்பிப்போகோம்." என்று அலறினார்கள். இந்தப் பரிதாப கரமான காட்சியைக்கண்டவர்களெல்லோரும் இந்த நாகரிக பிரிட்டிஷ் கவர்ன்மெண்டில் இவ்வாறு கட்டாயப்படுத்திக் கூலிகளை வேலை வாங்குவது அநியாயம்! என்று சொல்லிக் கொண்டார்கள். இவர்கள் இன்னும் வேலைக்குப் போகவில்லை.

கால் வயிறு அரை வயிறு பட்டினி.

ஸிலோனிலுள்ள இந்தியர்களின் பரிதாப நிலைமையை முக்கியமாகச் சென்னை மாகாணத் தலைவர்கள் அறியவில்லை. சென்னை மாகாணத் தலைவர்களில் சிலர் தவிர மற்றவர்கள் ஸ்வயத்திற்கு பாடு படுவதோடு கட்சிப் பிரதிக் கட்சிகள் செய்துகொண்டு காலத்தை வீண்நாளாகக் கழிக்கிறார்கள். மேலும் கோழும் குண்டுணியும் இத்தலைவர்களுடைய முக்கிய வேலையாயிருக்கின்றனவென்பதைக் கொஞ்சம் ஊன்றிப் பார்த்தவர்கள் நன்கறிவார்கள். குடியேற்ற நாடுகளிலும் ஸிலோனிலும் இந்தியக் கூலிகளின் கஷ்டங்களை நீக்க இத்தலைவர்களில் எவரேனும் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார்களா? சுமார் ஆறு லட்சம் இந்தியர்கள் அநேகமாக ஐரோப்பியர்களால் நிர்வகிக்கப்படும் தோட்டங்களில் கூலிகளாக அமர்ந்து வேலை செய்து வயிறு பிழைக்கிறார்கள். காடுகளும் மேடுகளுமாயிருந்த பிரதேசங்களைச் செழிப்பாகச் செய்து அவைகளைச் சிங்காரத் தோட்டங்களாக அமைத்தவர்கள் இந்தியக் கூலிகளாகும். ஐரோப்பியத் தோட்டக்காரர்கள் கொழுக்கும் படி செய்தவர்கள் இந்தியக் கூலிகளே யாகும். இங்ஙனமிருக்க இப்போது இந்தியக் கூலிகளின் நிலைமை யாது? குறைந்த சம்பளம் கொடுக்கப்படுகிறார்கள் அதிக நேரம் கட்டாயப்படுத்தி வேலை வாங்கப்படுகிறார்கள். அற்ப குற்றங்களுக்குக் குரூரமான தண்டனைகள் விதிக்கப்படுகிறார்கள். ஆக இந்த மூன்று பலன்களையும் தான் இந்தியக் கூலிகள் ஐரோப்பியத் தோட்டக் காரர்களிடத்தில் அடைந்திருக்கிறார்கள். உடுக்க உடையின்றியும் உண்ண உணவின்றியும் கடன் பட்டும் மாளும் இந்தியக் கூலிகளைக் கை தூக்கி விட ஒருவரேனும் முன்வரவில்லை.

பன்றிகள் வசிக்கலாம்.

இந்தியக் கூலிகள் குடியிருக்கும் வீடுகள் பன்றிகளுக்குத்தான் யோக்கியதை. குடியிருக்கும் ஒவ்வொரு வீடும் பத்தடி அகலமும் 12 அடி நீளமும் தானிருக்கிறது. இந்த அறைக்கு காற்றுப் போக்கு வசதி ஒன்று மில்லை. கதவுகளும் நிலைப்படிகளும் மிகவும் சிறியனவாயிருப்பதோடு எப்போதும் அறைகளில் ஈரம் தங்கி இருக்கும். கூலிகள் விடியற்காலத்தில் 4 மணிக்கு எழுந்திருந்தால் தான் தன்னுடைய காலைக் கடன்களை முடித்துக்கொண்டு அதிகாலையில் ஆறு மணிக்கு வேலை செய்யப் போக முடியும். மாலையில் ஆறு மணிக்கு மறுபடியும் வெளியே விடப்படுகிறார்கள். ஈவு இரக்க மின்றி வேலை வாங்கப்பட்ட இந்தியக் கூலிகளை ஐரோப்பியத் தோட்டக்காரர்கள் என்ன செய்கிறார்கள்? அற்பக் குற்றங்களுக்காக இந்தியக் கூலிகளைக் கடுமையாக தண்டிக்கிறார்கள். நோயாளியாகப் போய் விட்டால் வேலையினின்றும் நீக்கப்பட்டு நிராதரவாக தெருவில் விடப்படுகிறார்கள். ஒருகால் தெய்வாதீனமாக இவ்வாறு வெளியே துரத்தப் பட்டவர்களுக்கு வியாதி குணமடைந்து விட்டால் மறுபடியும் இவர்கள் பிடிக்கப்பட்டு பழைய எஸ்டேட்டுக்குக் கொண்டுபோகப் படுகிறார்கள்.

இவ்வளவு தானா?

இந்தியக் கூலிகள் அனுபவிக்கும் கொடுமைகளை ஒவ்வொன்றாகக் குறிப்பிட்டு எழுதினால்நான் எழுதும் கடிதம் நீண்டுவிடுமென்று அஞ்சி இத்துடன் விடுக்கிறேன். ஸிலோன் கோர்ட் அட்வகேட்டான மிஸ்டர் பெரிய சுந்தரம் மூட்டு ஐரோப்பியத் தோட்டக்காரர்கள் செய்யும் அநீதிகளைக் கோவையாக ஸிலோன் முதலாவது காங்கரஸ்கூட்டத்தில் பகிரங்கம் செய்ததை இந்தியர்கள் நன்கறிந்திருப்பார்களென்று நம்புகிறேன். இந்தியக் கூலிகளின் கஷ்டவாழ்க்கை இவ்வாறாக விருக்கிறது. இந்தியக்கூலிகளுடைய கஷ்டங்கள் நாளுக்கு நாள் அதிகரிக்கின்றனவேயன்றிக் குறைந்தபாடில்லை.

நிலைமை மாறவில்லை

சென்னைக் கவர்ன்மெண்டாரின் தூண்டுதலின்மீது ஸிலோன்க் கவர்ன்மெண்டார் இந்தியக் கூலிகளின் கஷ்டங்களை நீக்க ஒரு ஆர்டினன்ஸ் சட்டமசோதா கொண்டுவந்தனர். இம்மசோதாவில் பிற்போக்கான விதிகளிருந்தாலும் இது சட்டமாக நிறைவேற்றப்பட்டால் கூடிய வரையில் இந்தியக்கூலிகள் இப்போது அனுபவித்து வரும் கொடுமைகளை அனுபவிக்க மாட்டார்களென்று எதிர்பார்க்கப்பட்டது. அந்த மசோதா சட்டமாக்கப்படுகிற வழியைக்காணோம். ஐரோப்பியத் தோட்டக்காரர்கள் ஒரு முகமாயிருந்து இப்போது தன்னிவைக்கப்பட்டிருக்கிற மசோதா நிறைவேறாமல் செய்துவிட வேண்டுமென்று பகீரதப்பிரயத்தனங்கள் செய்கிறார்கள். கவர்ன்மெண்டில் ஐரோப்பியத் தோட்டக்காரர்கள் செல்வாக்குப் பெற்றிருப்பதைப் பார்த்து மேற்குறிப்பிட்ட மசோதாவின் தாராளக் கொள்கைகள் அடிபட்டுப்போய் விடுமோவென்று இங்குள்ள இந்தியர்கள் சந்தேகப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த மசோதா ஐரோப்பியர்களுக்குச் சாதகமாகவும் இந்தியக்கூலிகளுக்குப் பாதகமாகவும் செய்யப்படுமென்று அஞ்சுகிறேன்.

தனிப்பிரதிநிதித்துவம் வேண்டும்

ஸிலோன் சீர்திருத்த சட்டசபையில் இந்தியக் கூலிகளுக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்கப்படவில்லை. தோட்டக்காரர்களுக்கு அதிகப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பொதுவாக ஸிலோன் இந்தியர்களுக்கு ஒரு ஸ்தானம் கொடுக்கப்பட்டிருந்தாலும் அந்தஸ்தானம் பணக்கார இந்தியர் ஒருவருக்குப் போய்விடும். அவர் இந்தியக் கூலிகளிடத்தில் அனுதாப முடையவராயிருப்பரென்று நாம்சொல்லமுடியாது. ஸிலோன் இந்திய சங்கத்தாரும், வியாபாரச் சங்கத்தாரும் இந்தியக் கூலிகளுக்குத்தனியான பிரதிநிதித்துவம் வேண்டுமென்று முறையிட்டுக் கொண்டும் லார்டுமில்னர் அலட்சியம் செய்து விட்டனர்.

இலங்கையிலுள்ள இந்தியக்கூலிகள் ஒற்றுமையாகஇல்லை. அவர்களுடைய உரிமைகளைப் பாதுகாப்போருமில்லை. தொழிலாளர்களுக்குத்தனிப்பிரதிநிதித்துவம் கொடுக்கப்படாவிட்டால், அவர்களுடையகதி அதோகதியாகததானிருக்கும். தங்கள் பத்திரிகைக்கு எழுதவேண்டிய ஸிலோன் விஷயங்கள் இன்னும் பல விருக்கின்றன. அவைகளை மறுகடிதத்தில் எழுதுகிறேன்.

———

கல்விப் பகுதி.

சென்னை முத்தியாலுப் பேட்டை ஹைஸ்கூல் மாணவர் சங்கத்தில் மிஸ்டர் ஆர். எம். ஸ்டாதம் அக்கிராசனத்தின் கீழ் சென்னை பச்சையப்பன் கலாசாலைத் தலைவரான மிஸ்டர் வி. எல். ரென் என்பவர் ஆங்கிலமாணவர்களின் வாழ்க்கையைப்பற்றி ஒரு சிறந்த உபந்நியாசம் புரிந்தார். அதன் சாராம்சமாவது:—

ஒரு மாகாணத்தின் சர்வ கலாசாலையானது அந்த மாகாண வாசிகளின் நாகரிகத்தையும் பயிற்சியையும் பிரதி பிம்பிக்கக்கூடியதாயிருக்கவேண்டும். யூனிவர் ஸிடியில் வியாபாரப் படிப்பைச் சம்பந்தப்படுத்தக்கூடாது. வியாபாரப் பள்ளிக்கூடங்களும் கலாசாலைகளும் பிரத்தியேகமாக ஏற்படுத்தப்படவேண்டும். ஒரு சமயம் இங்கிலாந்தில் படிப்பானது மதசம்பந்தமுள்ளதாயிருந்தது. மத உணர்ச்சி பெற்றே முற்காலம் ஆக்ஸ் போர்டு காம்பிரிட்ஜ் சர்வ கலாசாலைகள் மிகப் பிரகாசமாயிருந்துவந்தன. கல்வி மதத்துடன் சம்பந்தப்பட்டிருந்ததால் ஜனங்களில் பரோபகாரமுள்ளவர்கள் தங்களுடைய பணங்களைக் கலாசாலைகளுக்கு எழுதிவைத்தார்கள். இங்கிலாந்தில் தற்காலம் ஏற்படுத்தப்படும் கலாசாலைகள் மதப்பற்றில்லாமலிருந்து வருகின்றன.

* *

இப்போது இங்கிலாந்திலுள்ள சர்வ கலாசாலைகளில் லீட்ஸ் சர்வ கலாசாலை யொன்று தான் கூடிய வரையில் பழைய காலத்துக் கல்வி லட்சியத்தைக் கைப்பற்றி வருகிறது. இக்கலாசாலையைச் சேர்ந்த சிலர் எலிமெண்டரி பாடசாலைகளில் கற்றுக்கொடுக்கப்படும் படிப்பு இங்கிலீஷ் ஜனங்களுக்குப் போதாதென்று கிராமங்களிலுள்ளோர்க்கும் நகரங்களிலுள்ளோர்க்கும் மத சம்பந்தமான கல்வியை உபந்நியாச மூலமாக நன்றாகப் போதித்து வருகிறார்கள் இவர்களுடைய முயற்சியின்பயனாக இங்கிலீஷ் மாணவர்கள் கூடிய வரையில் நல்ல கல்வி கற்பிக்கப்பட்டு வருகிறார்களென்று சொல்லலாம். லீட்ஸ் யூனிவர் ஸிடியார் அனுபவ மூலமாக ஒரு விஷயத்தை அறிந்துகொள்ளலானார்கள். தங்கள் யூனிவர் ஸிடியை யொட்டியுள்ள பாடசாலைகளில் பயிலும் மாணவர்களுக்குப் படிப்புக்கற்றுக்கொடுப்பது மாத்திரம் தங்களுடைய வேலையல்லவென்றும்; நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபடும் தொழிலாளர்களுக்கும் தங்களுடைய சர்வ கலாசாலையின் லட்சியத்தை அனுசரித்துள்ள கல்வியை உபந்நியாசகர்களை அனுப்பி அவர்கள் மூலமாகப் போதிப்பதும் தங்களுடைய கடமை யென்றும் உணர்ந்திருக்கிறார்கள். இவ்வாறு எல்லா யூனிவர் ஸிடிகளும் செய்யவேண்டும். எலிமெண்டரி பாடசாலை படிப்பு முதல்யூனிவர் ஸிடி படிப்பு வரையில் தேச முன்னேற்றத்திற்கான ஒரு லட்சியத்தை முன்னிறுத்தி மாணவர்களுக்குப் படிப்புக் கற்றுக்கொடுக்கவேண்டும். இந்திய மாணவர்கள் பரீட்சை, பரீட்சை என்ற பயத்தை விட்டொழிக்கவேண்டும். மாணவர்கள் தங்கள் வாழ்நாளை வீண் நாளாகக் கழிக்காமல் தங்களுடைய புத்திக்கும் சக்திக்கும் ஏற்றபடியும் தங்கள் லட்சியத்திற்கு ஒத்தவாறும் வாழ்நாளை ஒழுங்குபடுத்திக்கொள்ளவேண்டும்.

* *

இது நியாயந்தானே?

தற்காலம் ஏழைகள் பிரயோஜனப்படவேண்டும் என்று வைத்திருக்கிற பள்ளிக்கூடங்கள் தாலூகா போர்டார் ஏற்படுத்தியிருக்கும் எலிமெண்டரி பாடசாலைகளே. இப்பாடசாலைகளுக்கு வித்யா இலாகா அதிகாரிகளான "பாடசாலை இன்ஸ்பெக்டர்களும் ஸப் அஸிஸ்டெண்ட் இன்ஸ்பெக்டர்களும் மாத்ரு ஸ்தானம். தாலூகா போர்டாரே பித்ருஸ்தானம். ஒரு குடும்பத்தில் ஸம்ரட்சணை கர்த்தா தகப்பனார் எனலாம். ஆனால் பிதா கொடுக்கும் ஸாமக்ரியைகள் எவ்வளவு பயனைக் கொடுக்கத்தக்கதோ அவ்வளவு பயனையும் வீண் போகாமல் அதை யடையவேண்டியவர்கள் அடையுமாறு குடும்பத்தை நடத்திவைக்க மாதா கடமைப்பட்டதுபோல் வித்யா இலாகா உத்யோகஸ்தர்களும் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் அப்படித் தங்களுடைய கடமையைச் செய்பவர்களாகக் காணோம்.

* *

தங்கள் வீட்டுக் கவலைகளுடன் ஸ்கூல் கவலைகளையும் ஏற்றுக்கொண்டும் குழந்தைகளைப் பெறுவதுமட்டிலுமே தங்கள் கடமையென்று அத்துடன் தங்கள் கடமையைச் செய்துவிட்டதாகப் பாவித்து, ப்பள்ளிக்கூடத்துக்குக் குழந்தைகளை யனுப்பிய நாள் முதல் குழந்தைகள் வீட்டில் சாதஞ்சாப்பிடும் கவலை கூட உபாத்தியாயருடையது என்று தங்கள் கைகழுவி உபாத்தியாயர் தலையில் பாரத்தைப்போட்டு வருகிற பெற்றோர்களுடைய கவலையையும் ஏற்றுக்கொண்டும், இன்ஸ்பெக்டர்டர்கள் என்கிற தேவதைகள் வாக்கையும் பரிபாலித்தும் ஏழைப்பாடசாலை உபாத்யாயர்கள் கஷ்டப்பட்டு வருகிறார்கள். இது பெற்றோர்களுக்குரியதானே?

* *

நியாய தேவதை கூறுவது என்னவென்றால் இன்ஸ்பெக்டர், ஸப் அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டர், சூ-பர் வைஸர் இம்மூன்று பேர்களுமே இப்பள்ளிகூட உபாத்தியாயர்கள் கவலைகளையும் பொறுப்புகளையும் பகிர்ந்து கொள்ளவேண்டுமென்பதாகும். பெற்றோர்கள் பொறுப்பு என்னவென்று அவர்களுக்கு எடுத்துக்காட்டி வற்புறுத்துவது அதிகார தேவதைகளுடைய முதல் கடமையாகும்.

மேலும் நியாய தேவதை என்ன சொல்லுகிறது? ஏழை எலிமெண்டரி பாடசாலை உபாத்தியாயர்களின் பரிதாப நிலைமையையும், அவர்கள் படும் கஷ்டங்களையும் மேலதிகாரிகள் கவர்ன்மெண்டாருக்குத் தெரிவிப்பது அவசியமல்லவா? அவர்கள் செய்யும் வேலைக்குத் தகுந்தபடியும் காலத்திற்கேற்றவாறும் சம்பளம் கொடுக்கப்பட வேண்டுமென்று மேலதிகாரிகள் வற்புறுத்துவது கடமையல்லவா? மேலதிகாரிகள் இதுகாறும் ஏழை எலிமெண்டரி பாடசாலை உபாத்தியாயர்களின் நிலையை உயர்த்துவதற்கு என்ன முயற்சிகள் செய்திருக்கிறார்களென்று ஓர் உபாத்தியாயர் எழுதுகிறார்.

* *

இஃதென்ன தர்மம்?

உலக முழுவதும் பஞ்சம பிணி வாட்டிக்கொண்டிருப்பது அரசாங்கத்தாருக்கும், கல்வி இலாகா அதிகாரிகட்கும் தெரியாதோ? சமீபத்தில் சென்னை தபால்காரர்களுக்கும் அவர்களின் சம்பளம் ரூ 18 லிருந்து 24 வரையில் உயர்த்தப்பட்டிருப்பதாகவும் நடுத்தர உத்தியோகஸ்தர்களுக்கும் G. O. no 499 ல் கொடுத்த அலவுன்ஸ் போதாதென்று முறையிட்டதற்கேற்ப அவர்களுக்கும் ஒருவாறு உயர்த்தப் பட்டிருப்பதாகவும் அறிந்தோம். கல்வி இலாகா மாகாண அதிகாரிகளுக்கும் ரூ 200-50-300, ரூ 300-50-500 ரூ வீதம் சென்ற டிஜம்பர் மாதத்திலிருந்து கொடுக்கப்படுமென்ற உத்தியோக அறிக்கையைப் பத்திரிகைகள் வாயிலாகவும் அறிந்தோம். சென்ற லோகல் முனிஸிபல் கான்பரன்ஸில் உயர்தர உத்தியோகஸ்தர்களின் சம்பளம் உயர்த்தப் பட்டதாகவும் அறிந்தோம்.

* *

இப்படி உயர்தர உத்தியோகஸ்தர்களுக்குச் சம்பள உயர்வு, தாங்கள் கோரியபடி அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வருகின்றது. ஆனால் நாம் கேட்பது உயர்தர உத்தியோகஸ்தர்களுக்கு மட்டில் தான் பஞ்சமா? அல்லது எல்லோருக்கும் பஞ்சமா? என்பதுதான். அப்படி எல்லோருக்கும் பஞ்சம் உண்டு, என்று அதிகாரிகள் உணர்ந்துகொண்டு வந்திருந்தால் கவர்ன்மெண்டார் எல்லோரையும் ஒரு கண்ணைப் பார்ப்பதுதான் தர்மம்.

* *

இதை விட்டு, ஒரு சாரார்களுக்கு மட்டும் சம்பளம் உயர்த்திக் கொடுப்பது உயரிய கருணையாமோ? அரை குறைபடிப்புப்படித்த தபால்காரன் ரூ 18 முதல் 24 ரூ சம்பளமும், "போலீஸ் சேவகன்" மாதம் ஒன்றுக்கு 16½ ரூ சம்பளமும், கோர்ட்டு டபேதாரனுக்கு 20 ரூ சம்பளமும் சென்னை தோட்டி மாதம் 15 ரூபாய் சம்பளமும், கல்வி இலாகாவிலுள்ள பியூன் மாதம் 12 ரூபாய் சம்பளமும் பெற்றுவருகிறான். இதுதவிர, வெளியில் அதிகாரிகளுடன் சென்றால் படியும் பெறுகிறான். இப்படிக் கிருக்க ஆரம்பப் பாடசாலை உபாத்தியாயர்கள் எவ்விதத்தில் ஷை பியூன், தபாற்காரன், போலீஸ் சேவகன், சென்னைத் தோட்டி, தொழிற்சாலைகளில் வேலை செய்யும் கூலியாள், இவர்களை விடக் குறைந்தவர்? ஏன் உபாத்தியாயர்களைக் கல்வி இலாகா பியூனைப்போல் 12 ரூ பெறும்படி விட்டிருக்கிறார்கள்? இதனால் கல்வி இலாகாவுக்கே பெருத்த அவமான மன்றோ?

* *

சம்பளக் கமிட்டியார் சிபார்சு செய்து 4 மாதமாயும் ஏதாவது இவர்களைச் சிறிதேனும் கவனித்தார்களா? அல்லது 499 நெ. G. O. உத்தரவின்படி அதில் நான்கு ரூபாய் அலவுன்ஸ் கொடுபடும் என்று வெளியிட்ட உத்தரவுதான் என்னவாயிற்றோ? ஒவ்வொரு உபாத்திமைச் சங்கத்தாரும் தீர்மானங்கள் செய்தனுப்பியது அரசாங்கத்தாரின் கைக்கு எட்டவில்லையா? யென்று சேலத்திலிருந்து ஒரு நிரூபர் எழுதுகிறார்.

* *

கஷ்டம் ஒழியவில்லை.

காருண்யமுள்ள கவர்ன்மெண்டார் தற்கால நிலைமையை உத்தேசித்து கீழ்த்தர சிப்பந்திகளுக்கு ரூ 12 க்குக் குறையாமலும், சாதாரண குமாஸ்தாக்களுக்கு ரூ 30 குறையாமலும், உயர்தர உத்தியோகஸ்தர்களுக்கு ஸர்விஸ் கால நிர்ணயமாகச் சம்பள உயர்வும் ஏற்படுத்தி ஷை விஷயங்கள் அமுலுக்கு வந்து சில மாதங்களாகி உயர்தர சம்பளமும் பெற்று வருகிறார்கள். இச்சம்பளம் போதாதென்று மேல் கிடைக்க வேண்டிய வழிகளையும் தேடி வருகிறார்கள். கிராமக் கர்ணம், சிப்பந்திகளுக்கும் ஏதோ ஒருவாறு சம்பளம் உயர்த்தியிருக்கிறார்கள். உபாத்தியாயர்களுடைய கஷ்டமோ நிவர்த்தியாக வில்லை. சம்பளக் கமிட்டியார் அபிப்பிராயப்படி ரூ 30 தாவது சம்பளம் ஏற்பட்டாலொழிய இவர்கள் வறுமை நீங்குமா?

* *

கிராமாந்திரங்களில் அதிகச் செலவில்லை. ஆகவே சம்பளம் சொல்பம் போது மென்பது உபாத்தியாயர்கள் விஷயத்தில் எவ்விதத்திலும் பொருந்தாது. இருப்புப்பாதை, தந்தி, தபால் முதலிய சாதனங்களால் கட்டுப்படுத்தப் பட்ட இந்த ராஜ்யத்தில் கிராமம், பட்டணம் என்கிற வித்தியாசத்திற்கு இடமுண்டோ? கிராமத்தில் ஒரு சவுகரிய மிருந்தால் அதை ஈடு பண்ண மற்றொரு அசவுகரியம் கூடவே ஏற்பட்டிருக்கிறது.

சம்பளக் கமிட்டியார் பிரதம பாடசாலை உபாத்தியாயர்களுடைய நிலைமையை நன்றாக எடுத்துக் காட்டி ரூ 30 ஆவது ஆரம்பத்தில்

காகித நூற்களும் காகித நார்களும்.

அலகபாத் "லீடர்" பத்திரிகையில்
ஒரு நிருபர் எழுதுகிறார்.

ஜர்மானியில் காகிதத்தினின்று நூற்கள் நெய்யப்படுவதாய் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதன் மாதிரி நூற்களை நாம் பார்வையிட்டதினின்று நெசவுக்கு வேண்டிய நூற்களுக்குப்பதிலாய் அவைகளைச் சாதாரணமாய் உபயோகிக்கலாம் என்றே தோன்றுகிறது. காகிதத்தினின்றும் நூற்கள் நெய்து ஒருவிதத்துணிசெய்யலாம். சமீபத்தில்நடந்த சண்டை ஆரம்பிப்பதற்கு முன் இந்தத் தொழிலானது, அமெரிக்கா, ஐக்கிய இராஜ்யங்கள், ஜப்பான் முதலியவிடங்களில் ஆரம்பிக்கப்பட்டது. சணல், கம்பளி, பருத்தி, இவைகள் குறைந்துபோன காலத்தில் இந்தக்காகித நூல்எடுக்கும்தொழிலில் அந்நாட்டினர் மிகச் சிரத்தை பாராட்டி வந்தனர். இக்காலத்தில் ஜர்மனியில் இந்தக்காகித நூல் நூற்கும் தொழில் காணப்படுகிறது. சென்ற நவம்பர் மாதத்தில் ஜர்மனியில் மியூனிச் ஹாண்டல்ஹாகூல் என்பவர் பிரசங்கம் செய்த போது 12 கோடியே 20 லட்சம் பவுன் மதிப்புள்ள சணல் ஜர்மனி ஆஸ்திரியா இரண்டு தேசத்திற்கும் சண்டைக்கு முன் வந்துகொண்டிருந்ததாகத் தெரிவித்தார். பிறகு இச்சணலிற்குப் பதிலாகக் காகித நூற்கள் ஏற்பட்டிராவிடில் ஜர்மனியிலுள்ள நெசவுத் தொழிற்சாலைகள் எல்லாம் மூடப்பட்டே இருக்கும். 1917ம் ஆண்டின் முடிவில் இந்தக் காகித நூல்நூற்கும் வேலையில் 15 ஆயிரம் பேர்கள் அங்கே வேலைசெய்து வந்தனராம். $3\frac{1}{2}$ லட்சம் சதுர மீட்டர் மரங்களினின்று காகித நூற்கள் செய்யப்பட்டதாகவும் அவற்றுள் $1\frac{1}{2}$ கோடி சதுரமீட்டர் மரங்கள் வெளி நாடுகளினின்றுவந்ததாகவும் அவர் தம் உபந்நியாசத்தில் கூறியுள்ளார். அதற்குச் சேர்க்கப்படவேண்டிய ஏராளமான கந்தகம் ஸ்வீடனினின்று கிடைத்ததாம்.

காகிதநூல் செய்யும் விதம்

நூல் நெய்ய உபயோகப்படும் காகிதம் உயர்ந்ததினுசாக இருக்கவேண்டியது. அது மரக்கூழில் அநேக ரசாயனப்பொருள் சேர்த்துச் செய்யப்படுகிறது. அந்தக் கூழ் காயாமலிருக்கும் பொழுதே நீண்ட பட்டைகளாகச் செய்யப்படுகின்றன. பின்பு உருண்டையாய் உருட்டி அதனின்றும் மெல்லிய நூற்கள் எடுக்கப்படுகின்றன. இவ்வாறு செய்வது மிக இலகுவாயிருந்தாலும் காகிதக் கூழ் செய்யும் இயந்திரத்திலேயே நூலும் நூற்கவேண்டியிருக்கிறது. அகண்ட நாடாவைப்போல் முதலில் கூழை அகற்றிக் காயவைத்து, வேண்டிய அகலத்திற்குத்தக்கபடி துண்டு செய்யப்படுகின்றது. அந்தத் துண்டுகளைத் திரித்து நூற்களாகச் செய்யலாம். அத்துண்டுகளைத் தனியே ஒருஇயந்திரத்தில் கொடுத்துத் திரித்தே நூலாக்கவேண்டியிருக்கிறது. அந்த நூற்களை ஒரு குச்சியில் சுற்றி அதை அப்படியே ஒரு திராவகத்தில் தோய்த்து ஊறவைக்கவேண்டும். ஒரு குழாய்க்குள்ளிருக்கும் சிறிய துவாரத்தில் அந்த நூலின் தலைப்பைக்கோத்து அதை ஒருவன் இழுத்துக்கொண்டே செல்கிறான். அப்போது அந்தக் குழாயும் சுற்றுகிறது. நூலும்நன்றாய்த்திரிக்கப் படுகிறது. மற்றொருவிதமாக, சணல் நூல் எடுப்பதுபோல் நூல் நூற்கும் தறிகளில் கொடுத்தும் செய்கிறார்கள். ஒரு இயந்திரத்தில் கொடுத்து இழுக்கப்படுகையில் நனைந்திருக்கும் நூலானது கெட்டிப்பட்டு நன்றாய்க்காய்ந்து போம்படி அதற்குத்தக்க இயந்திரங்களும் அதிலேயே பொருத்தப் பட்டிருக்கின்றன.

பாத்திரம் செய்யும் இயந்திரம்.

பாத்திரம் செய்யும் இயந்திரம் ஒன்று இருக்கிறது. அதில் எந்த மாதிரியான பண்டம் செய்ய வேண்டுமோ அதை வைத்துக் காகிதக்கூழை அதன் மேல் பூசி இயந்திரத்தைச் சுற்றினால் அந்தப்பாத்திரம் போலவே கூழும்பரவி அதைப் போலவே உருவத்தைக் கொடுக்கிறது. காய்ந்த பிறகு அது பாத்திரங்களாக உபயோகிக்கப்படுகிறது.

காகித நார் செய்வதற்குப் பருத்தி நூல் நெய்யும் இயந்திரத்தை விடச் சணல் நூல் நூற்கும் இயந்திரமே சிலாக்கியமெனக் கருதப்படுகிறது. பருத்தி நெய்யும் இயந்திர உதவியைக் கொண்டு நூற்கப்படுவதால் நூலானது சில விடங்களில் இலேசாயும் சில விடங்களில் தடிப்பாயும் வருகின்றது.

சாயங்கோடுத்தலும் வெளுத்தலும்.

ஜர்மனியில் இக்கைத் தொழில் அதிக விருத்தியாகுமென எதிர் பார்க்கப் படுகிறது. சென்ற 1916ம் ஆண்டின் டிசம்பர்மீ 9உ ஜர்மன் நெசவுத்தொழிற்சாலைச் சங்கத்தில் ஒருவர் உபந்நியாசம் செய்தபோது "சண்டைக்குப் பின்காகித நூல் செய்யும் தொழிலை அதிகமாகவேண்டப்படும். சணலைவிடக்காகிதநூல் "மிக்க திருப்திகரமாயிருக்கும் என்பதில் ஐயமில்லை. அந்நூல் உறுதியாயும் தினிசுநன்றாயும், பளபளப்பாயுமிருக்கிறது. இந்த நூலைச் சாயம் போடுவது மிகச் சுலபம். முழுச்சாயம் போட்டால் மிக நன்றாயிருக்கிறது" என்று கூறினார்.

நல்ல ஜாதி நூற்களுக்குக் கந்தகமும் சாயமும் கலந்தவாணமே மிகச் சிலாக்கியமானது. இதை வெளுப்பது மிகக்கடினமாய் விட்டது. சுண்ணாம்புக் தண்ணீரில் ஒரு வாரம்வைத்துவெளுக்கவேண்டியிருக்கிறது. அத்துடன் சிலதிராவகங்கள் சேர்த்தல் அவசியமாகும். இதை நன்றாய் வெளுப்பது கஷ்டம் என்றுதோன்றினால காகிதக் கூழையே காகிதத்தொழில்களின் உதவியைக்கொண்டு வெண்மையாக்கி நெய்வதே உசிதமானது.

காகித நார்.

சில விடங்களில் இந்தக் கைத்தொழில் விருத்தியைப் பற்றி அதிக ஊக்கம் கொண்டிருக்கிறார்கள். இது விஷயத்தில் ஜர்மானியர் அதிக கவலை கொண்டிருக்கிறார்கள். பருத்தி சணல் இவைகளுக்குப் பதிலாக வியாபார ஸ்தலங்களில் காகித நூலே மிக்க பயனைத்தருவதாகும். மற்றத்தேசங்களில் நெய்யப்படும் நூற்கள் எல்லாவற்றிலும் யுனைடெட் கிங்கிடத்தில் செய்யப்படும நூற்களே உயர்ந்தவெனத் தொழில் ஆராய்ச்சிச் சங்கத்தார் கண்டுபிடித்திருக்கின்றனர். சில மாதிரிகளை ஆராய்ந்து பார்க்கையில் அந்நூலிற் சேர்ந்துள்ள பொருளில் நூற்றுக்கு 40 பங்கு காகிதச்சாமான்களும் 40 பங்கு பருத்தியும் 20 பங்கு கம்பளியும் கலந்து இருக்கின்றனவென்றுதெரிகிறது. அந்தகார்களால் மழையைக்காக்கக்கூடிய துணிகளும் செய்யப்படுகின்றன. பொதுவாகச்சணல்அகப்படாமைக்கு இது மிக்க சிறந்த தொழில் என்பதில் ஆட்சேபணையே இல்லை.

கொடுக்க வேண்டுமென்று அபிப்பிராயப் பட்டிருக்கிறார்கள். அது போதாதென்று உபாத்தியாயர்கள் எண்ணியிருக்கும் நாளில் ரூ 30 வீதம் கொடுத்தால் ஏராளமான தொகை வேண்டுமென்று கவர்ன்மெண்டார் அபிப்பிராயப்படுவது ஆச்சரியமாய் இருக்கிறது. வேறு அயிட்டங்களில் செலவைக் குறைத்து உபாத்தியாயர்கள் குறையைத்தீர்க்கத்தான் முயல வேண்டும்.

*　　　*

உபாத்தியாயர்களுக்கு "ப்ரைவேட்" சொல்லிக்கொடுப்பதில் திரவிய லாபம் கிடைக்கும் என்று சிலர் எண்ணலாம். அப்படி எல்லா உபாத்தியாயர்களுக்கும் கிடைக்காது. கிடைப்பதும் சொல்பம். அதுவும் ஸ்திரமல்ல. ஆதலால் அதைக்கொண்டு வந்து பேசுதல் கூடாது.

லோகல் போர்டு ஸ்கூல்களில் சம்பளம் உயர்த்தும்பொழுது எயிடெட் ஸ்கூல்களிலும் தக்கவாறு சம்பளம் உயர்த்த வேண்டிய ஏற்பாடுகள் கூடவே செய்யப்பட வேண்டும். மார்ச்சு மீ வரையில் காத்திருந்து அப்பொழுது கிராண்டில் உயர்த்தினால் போதாது. தக்கவாறு கிராண்டை இப்பொழுதே உயர்த்தி அதிகப்படுத்தும் கிராண்டை மானேஜ்மெண்டார் அடையாமல் உபாத்தியாயர்களிடம் கொடுத்து அவர்கள் ரசீது பெற வேண்டு மென்கிற நிபந்தனையும் ஏற்பட வேண்டு மென்று வழுத்தூர் மதராஸா-இ. ஷைஉ-கதூல் இஸ்லாபாடசாலையின் தலைமை உபாத்தியாயரான ஸ்ரீமான் எம். நாகசுப்பிரமணிய ஐயர் எழுதுகிறார்.

உண்மையை மறைக்க யாவராலும் முடியாது; சிறிது காலம் அது மறைவு பட்டிருக்கலாம்; மறைவுபட்டிருக்குங்கால் உண்மையின் பிரகாசம் அதிகரித்துக்கொண்டிருக்கும். கடைசியாக, இது வெளிப்பட்டவுடன் அதன் ஒளி உலகத்தையும் பிரமிக்கச் செய்யும்:— சார்லஸ் பிராட்லா.

*　　　*

ஓர் அரசன் தன் தேசத்தில் ஜன நாயகம் ஏற்படுத்துவதனால் அவாது ஆட்சியின் உயர்ந்த அருமை பெருமை வெளியாகின்றன:— சாலன்.

*　　　*

அநீதியானது பலமான எதையும் நாசமாக்கிவிடும்:— லார்ட் சாலிஸ்பரி.

கோர்ட் விளம்பரங்கள்.

தஞ்சாவூர் அபீஷியல் ரிசீவர்
கோர்ட்டில்

1920ஸு I. P. No. 91.

தஞ்சாவூர் டிஸ்டிரிக்டு கோர்ட்டு.

1920ஸுத்திய I. P. No. 13

1. சுந்தராசாரியார் 2. கோதண்டருமய்யங்கார் 3. விஜயருகவய்யங்கார் 4. வேதாந்தய்யங்கார் 5. கோபாலய்யங்கார் 6. கிருஷ்ணமாசாரியார்.	மனுதாரர்கள்.
சொக்கலிங்க செட்டியார் வகையரு	எதிர் மனுதாரர்கள்

1920ஸுத்திய 5வது ஆக்டு 19வது செக்ஷன்படி இதனல் சகலருக்கும் தெரிவிப்பது என்னவென்றல்:—

திருத்துறைப்பூண்டிதாலூகாஉம் பளச்சேரியில் இருக்கும் அய்யாத்துரைய்யங்கார்குமாரர்கள் 1. சுந்தராசாரியார் 2 கோதண்டருமய்யங்கார் 3. விஜயருகவய்யங்கார் 4. வேதாந்தய்யங்கார் 5 கோபாலய்யங்கார் 6. கிருஷ்ணமாசாரியார் இனசால்வெண்டு மனுக்கொடுத்த ஷை மனு 1920ஸு செப்டம்பர்மீ 21வ ஈரஙகிக்குப் போடப்பட்டிருக்கிறது. ஆக்ஷேபனையுள்ளவர்கள் ஷை தேதியில் நேரிலாவது வக்கீல் மூலியமாவது ஆஜராய் தெரிவித்துக்கொள்ளவேண்டியது.

Tanjore. 28—8—20. } O. S. Ramachandra Iyer, *Official Receiver*

தஞ்சாவூர் அபீஷியல் ரிசீவர் கோர்ட்டில்.

1920ஸுத்திய I. P. நெ. 98

தஞ்சாவூர் டிஸ்டிரிக்டு கோர்ட்டு.

1920ஸுத்திய I. P. No. 10

சுப்பருய செட்டியார்	—மனுதாரர்
முகம்மது உசன் ருவுத்த வகையரு	எதிர் மனுதாரர்கள்.

1920ஸுத்திய 5வது ஆக்டு 19வது செக்ஷன்படி இதனல் சகலருக்கும் தெரிவிப்பது என்னவென்றல்:—

கூடலூர் கள்ளசெட்டி தெருவில் இருக்கும் வரதப்ப செட்டியார் குமாரன் சுப்பருய செட்டியார் இன் சால்வெண்டு மனுக்கொடுத்த ஷை மனு 1920ஸு செப்டம்பர்மீ 28வ ஈரஙகிக்குப் போடப்பட்டிருக்கிறது. ஆக்ஷேபனையுள்ளவர்கள் ஷை தேதியில் நேரிலாவது வக்கீல் மூலியமாவது ஆஜராய் தெரிவித்துக்கொள்ளவேண்டியது

Tanjore. 28—8—20. } O. S. Ramachandra Iyer *Official Receiver*

தஞ்சாவூர் அபீஷியல் ரிசீவர் கோர்ட்டில்.

1920ஸுத்திய I. P. நெ. 109.

நாகப்பட்டணம் டிஸ்டிரிக்டு முன்சீப் கோர்ட்டு,

1920ஸுத்திய I. P. No. 14.

முருகையாபிள்ளை — மனுதாரர்

குருஞதபிள்ளை வகையரு—எதிர்மனுதாரர்கள்

1920ஸுத்திய 5வது ஆக்டு 19வது செக்ஷன்படி இதனல் சகலருக்கும் தெரிவிப்பது என்னவென்றல்:—

நாகப்பட்டணம் பாவக்காரத்தெருவில் இருக்கும் ருமசாமிபிள்ளை குமாரன் முருகையாபிள்ளை இன்சால்வெண்டு மனுக்கொடுத்த ஷை மனு 1920ஸு செப்டம்பர்மீ 21வ ஈரங்கிக்குப் போடப்பட்டிருக்கிறது. ஆக்ஷேபனையுள்ளவர்கள் ஷை தேதியில் நேரிலாவது வக்கீல் மூலியமாவது ஆஜராய் தெரிவித்துக்கொள்ளவேண்டியது.

Tanjore. 28—8—20. | O. S. Ramachandra Iyer, *Official Receiver*.

தஞ்சாவூர் அபீஷியல் ரிசீவர் கோர்ட்டில்.

1920ஸுத்திய I. P. நெ 113.

தஞ்சாவூர் டிஸ்டிரிக்டு கோர்ட்டு.

1920ஸுத்திய I. P. No. 17.

பஞ்சனத ஆசாரி என்கிற பஞ்சாபகேச ஆசாரி	மனுதாரர்
மாணிக்கம்பிள்ளை வகையரு	எதிர் மனுதாரர்கள்.

1920ஸுத்திய 5வது ஆக்டு 19வது செக்ஷன்படி இதனல் சகலருக்கும் தெரிவிப்பது என்னவென்றல்:—

தஞ்சாவூர் தாலூகா திருவையாறில் இருக்கும் சுப்பன்ஆசாரி குமாரன்பஞ்சனதஆசாரி என்கிற பஞ்சாபகேச ஆசாரி இன்சால்வெண்டு மனுக்கொடுத்த ஷை மனு 1920ஸு செப்டெம்பர்மீ 30வ ஈரங்கிபோடப்பட்டிருக்கிறது ஆக்ஷேபனையுள்ளவர்கள் ஷை தேதியில் நேரிலாவது வக்கீல் மூலியமாவது ஆஜராய் தெரிவித்துக்கொள்ளவேண்டியது.

Tanjore. 28—8—20. } O. S. Ramachandra Iyer, *Official Receiver*.

தஞ்சாவூர் அபீஷியல் ரிசீவர் கோர்ட்டில்.

1920ஸுத்திய I. P. நெ. 108.

நாகப்பட்டணம் டிஸ்டிரிக்டு முன்சீப் கோர்ட்டு.

1920ஸுத்திய I. P. No. 13,

நாருயணசாமி தேவர்	மனுதாரர்
தண்டபாணி செட்டியார் வகையரு	எதிர் மனுதாரர்கள்.

1920ஸுத்திய 5வது ஆக்டு 19 வது செக்ஷன்படி இதனல் சகலருக்கும் தெரிவிப்பது என்னவென்றல்:—

நாகப்பட்டணம் வீரபத்திரஸ்வாமி கோவில் தெருவில் இருக்கும் முத்துசாமிதேவர் குமாரன் நாருயணசாமி தேவர் இன்சால்வெண்டு மனுக்கொடுத்த ஷை மனு 1920ஸு செப்டெம்பர்மீ 28வ ஈரங்கிக்குப் போடப்பட்டிருக்கிறது. ஆக்ஷேபனையுள்ளவர்கள் ஷை தேதியில் நேரிலாவது வக்கீல் மூலியமாவது ஆஜராய்தெரிவித்துக்கொள்ள வேண்டியது.

Tanjore. 28—8—20. } O. S. Ramachandra Iyer, *Official Receiver*.

தஞ்சாவூர் அபீஷியல் ரிசீவர் கோட்டில்.

1920ஸுத்திய I. P. நெ. 114.

தஞ்சாவூர் டிஸ்டிரிக்டு கோர்ட்டு.

1920ஸுத்திய I. P. No. 18.

V. S. ஆருமுதாசாரியார்	மனுதாரர்
தர்மலிங்கமளவருயர் வகையரு	எதிர் மனுதாரர்கள்.

1920ஸுத்திய 5வது ஆக்டு 19வது செக்ஷன்படி இதனல் சகலருக்கும் தெரிவிப்பது என்னவென்றல்:—

கும்பகோணம் அய்யங்கார் தெருவில் இருக்கும் ஸ்ரீனிவாஸருகவாசாரியார் குமாரன் ஆரு

வைத்தியக் குறிப்புகள்.

(1) சோகை, காமாலை, அஜீர்ணம், புளித்தேப்பம், பித்தாதிகம், இதா வயிறறுக கோளாறுகள், முதலியவை நீங்க அதிகாலையில் கிழக்குமுகமாக நின்று, தோல்போக்கியசுக்கு காலபலமும், கல்பண்ணீக்கி சுத்திசெய்த நற்சீரகம் கால்பலமும், நல்ல வெல்லம் (கருப்பு வெல்லம்) கால்பலமும் கூட்டி மென்று தின்று வரவும். இப்படியே காலைதோறும் மென்று தின்று அதன்மேல் உப்பு சேர்க்காமல் நீராகாரம் என்னும் சாதநீர்த்தம் அரைக்கால்படி சாப்பிடவேண்டும். இதனல் மேல்காட்டியவையன்றி இன்னம் பல கடுமையான பித்தவாத ரோகங்களும் தீரும்.

(2) அஜீர்ண ரோகங்கள். வயிற்றுவலி: இடுப்புக்குடைச்சல், தேகமாதியந்தமும் வலி, முதலியவை நீர்தோல்போக்கிய சுக்கு கால்பலம், கெட்டிவிளகு கால்பலம், சீரகம் கால்பலம், இவற்றில் சுக்கையும், மிளகையும் ஒன்றிரண்டாய்த் தட்டி சீரகத்தையும் சேர்த்து, பட்டணம் அரைப்படி ஜலம்விட்டு, வீசம்படியாக சுண்டக்காய்ச்சி காலையும் மாலையும் அரைவீசம்படியாக சாப்பிடவும் இப்படி தினம் புதிதாகச்செய்து 8, 6, 12 நாள்கள் வரை அவரவர் தேகநிலைக்குத் தக்கபடி உபயோகித்து வரலாம். எண்ணெய் ஸ்நானம்செய்யும் தினத்திலும், க்ஷவரம்செய்துகொள்ளும் நாளிலும் இந்த கியாழம் சாப்பிடக்கூடாது.

முதாசாரியார் இன்சால்வெண்டு மனுக்கொடுத்த ஷை மனு 1920ஸு செப்டெம்பர்மீ 28வ ஈரங்கிக்குப்போடப்பட்டிருக்கிறது. ஆக்ஷேபனையுள்ளவர்கள் ஷை தேதியில் நேரிலாவது வக்கீல் மூலமாவது ஆஜராய் தெரிவித்துக்கொள்ள வேண்டியது.

Tanjore 28—8—20 } O. S. Ramachandra Iyer, *Official Receiver*.

தஞ்சாவூர் அபீஷியல் ரிசீவர் கோர்ட்டு,

1920ஸுத்திய I. P. நெ. 118.

நாகப்பட்டணம் டிஸ்டிரிக்டு முன்சீப் கோர்ட்டு.

192ஸுத்திய I. P- No. 16.

முருகையன் செட்டியார்	மனுதாரர்
திருவேங்கடத்தய்யங்கார் வகையரு	எதிர் மனுதாரர்கள்.

1920ஸுத்திய 5வது ஆக்டு 19வது செக்ஷன்படி இதனல் சகலருக்கும் தெரிவிப்பது என்னவென்றல்:-

நாகப்பட்டணம் ஆரியநாட்டு தெருவில் இருக்கும் வீரப்ப செட்டியார் குமாரன் முருகையன் செட்டியார் இன்சால்வெண்டு மனுக்கொடுத்த ஷை மனு 1920ஸு செப்டெம்பர்மீ 30வ ஈரங்கிக்குப்போடப்பட்டிருக்கிறது. ஆக்ஷேபனையுள்ளவர்கள் ஷை தேதியில் நேரிலாவது வக்கீல் மூலமாவது ஆஜராய் தெரிவித்துக்கொள்ளவேண்டியது.

Tanjore, 28—8—20, } O. S. Ramachandra Iyer, *Official Receiver*

தஞ்சாவூர் அபீஷியல் ரிசீவர் கோர்ட்டில்.

1920ஞுத்திய I. P. நெ. 102.

திருத்துரைப்பூண்டி டிஸ்டிரிக்ட்டு முன்சீப் கோர்ட்டு.

1920ஞுத்திய I. P. No. 4.

வைத்திலிங்கம்பிள்ளை 1.	}	மனுதாரர்கள்.
மாணிக்கம்பிள்ளை 2.		
சுப்பய்யா நாயக்கர் வகையரு	}	எதிர் மனுதாரர்கள்.

1920ஞுத்திய 5வது ஆக்டு 19வது செக்ஷன்படி இதனால் சகலருக்கும் தெரிவிப்பது என்னவென்றால்:—

திருத்துரைப்பூண்டி பழய சந்தைதோப்பு தெருவில் இருக்கும் அழகப்ப தேவர் குமாரன் வைத்திலிங்கம்பிள்ளை 1. வைத்திலிங்கம்பிள்ளை குமாரன் மாணிக்கம்பிள்ளை 2. இன்சால்வெண்டு மனுக்கொடுத்து ஷ்டி மனு 1920ஞு செப்டம்பர்மீ 28உ ஈரங்கிக்குப் போடப்பட்டிருக்கிறது ஆக்ஷேபனையுள்ளவர்கள் ஷ்டி தேதியில் நேரிலாவது வக்கீல் மூலியமாவது ஆஜராய் தெரிவித்துக் கொள்ளவேண்டியது.

Tanjore. } O. S. Ramachandra Iyer.
28—8—20. } *Official Receiver*.

—

தஞ்சாவூர் அபீஷியல் ரிசீவர் கோர்ட்டில்.

1920ஞுத்திய I. P. நெ. 97.

தஞ்சாவூர் டிஸ்ரிக்ட்டு கோர்ட்டு.

1920ஞுத்திய I. P. No. 4.

நர்நேந்திர முதலியார்		—மனுதாரர்
ராமச்சந்திர செட்டியார் வகையரு	}	எதிர் மனுதாரர்கள்.

1920ஞுத்திய 5வது ஆக்டு 19வது செக்ஷன்படி இதனால் சகலரும் தெரிவிப்பது என்னவென்றால்:—

தஞ்சாவூர் கருந்தட்டாங்குடி ஜெயினத்தெருவில் இருக்கும் அய்யன் முதலியார் குமாரன் நர்நேந்திர முதலியார் இன்சால்வெண்டு மனுக்கொடுத்து ஷ்டி மனு 1920ஞு செப்டம்பர்மீ 30உ ஈரங்கிக்குப் போடப்பட்டிருக்கிறது. ஆக்ஷேபனையுள்ளவர்கள் ஷ்டி தேதியில் நேரிலாவது வக்கில் மூலியமாவது ஆஜராய் தெரிவித்துக்கொள்ளவேண்டியது.

Tanjore. } O. S. Ramachandra Iyer,
28—8—20. } *Official Receiver*.

—

தஞ்சாவூர் அபீஷியல் ரிசீவர் கோர்ட்டில்.

1920ஞுத்திய I. P. நெ. 106.

கும்பகோணம் டிஸ்டிரிக்ட்டு முன்சீப் கோர்ட்டு.

1920ஞுத்திய I. P. No. 20.

நசாதீன் சாயபு		—மனுதாரர்
காதர்பாஷா சாயபு வகையரு	}	எதிர் மனுதார்கள்

1920ஞுத்திய 5வது ஆக்டு 19வது செக்ஷன்படி இதனால் சகலருக்கும் தெரிவிப்பது என்னவென்றால்:...

கும்பகோணம் தாலூகா கொரனூடு கருப்பூர் துலுக்கத் தெருவில் இருக்கும் வாப்புகண்ணி ராவுத்தர் குமாரன் நசாதீன் சாயபு இன்சால்வெண்டு மனுக்கொடுத்து ஷ்டி மனு 1920ஞு செப்டம்பர்மீ 21உ ஈரங்கிக்குப் போடப்பட்டிருக்கிறது. ஆக்ஷேபனையுள்ளவர்கள் ஷ்டி தேதியில் நேரிலாவது வக்கீல் மூலியமாவது ஆஜராய் தெரிவித்துக்கொள்ளவேண்டியது.

Tanjore.. | O. S. Ramachandra Iyer,
28—8—20. | *Official Receiver*.

—

1,000 ரூபா இனும்.

உலகப்பிரசித்திபெற்ற சாலா மிசிரி முறப்பா.

கவர்ன்மெண்ட் ரிஜிஸ்டர் ஆயிருக்கிறது.

இப்பண்டிதர் சென்ற 6-வருஷ காலமாகப் பாடுபட்டுக்கொண்டு வருகிறார்.

தினந்தோறும் ஆப்பிரிக்கா, பர்மா, சிலோன், பனங், சிங்கப்பூர், இரங்கூன், கல்கத்தா, பம்பாய், ஐதராபாத், மதராஸ் முதலியஇடங்களிலிருந்து அநேகமாய் ஆர்டர்கள்வந்துகொண்டிருக்கின்றன. மேற்கண்ட முறப்பாவை உபயோகித்து குணமடைந்த சங்கதிகளுக்கும் அதன் பரிணாமத்தைப்பற்றியும் அநேக சர்டிபிகேட்டுகள் அனுப்பிக்கொண்டு வருகிறார்கள். எமக்கு கிடைத்திருக்கிற சர்டிபிகேட்டை பார்க்கவேண்டுமென்று விரும்புகிறவர்கள் தபால் மூலமாய் தெரிவித்தால் பிரியமாக அனுப்புகிறோம். சாலமிசிரி முறப்பா சாலமிசிரியாலசெய்யப்படவில்லையென்றும், அல்லது சர்டிபிகேட்டைப் பொய்யென்றும் ரூபிக்கிறவர்களுக்கு 1000 ரூபாய் இனும் கொடுக்கப்படும். அம்மாதிரியாக ரூபித்து மேற்கண்ட ரூபாயைக் கொடாதிருக்கும் பட்சத்தில் கோர்ட்டு மூலமாய் வசூல் செய்து கொள்ளலாம். இதுமனிதர்களுக்குப் பால்ய சேஷ்டைகளினாலும், துர் சகவாசங்களினாலும் எற்படக்கூடிய தாது நஷ்டத்தைக் கண்டிக்கப்பட்ட ஒருவித ஜீவரத்தினம்போலிருக்கின்றது. சாலாமிசிரி முறப்பா, அநேக விலையுயர்ந்த பதார்த்தங்களினாலும், அநேகவன மூலிகைகளாலும் தயார் செய்யப்பட்டிருக்கின்றது இதில் மதவிரோதமான எவ்வித பதார்த்தங்களும் சேர்க்கப்படவில்லை. யாவரும் சாப்பிடலாம். வெள்ளிபஸ்பம், தாம்பிரபஸ்பம், தங்கபஸ்பம் எவ்வித பஸ்பங்களும் இதற்குமுன் நிற்காது. ஒருதாமவரவழைத்து பரீட்சித்துப் பார்த்தால் பின் தங்களுக்குகே தெரியவரும். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்ற பழமொழிபோல் தேகத்தைக் காப்பாற்றிக்கொள்வது எல்லாருடைய கடமையாயிருக்கிறது. கிரயம் டம்பி 1-க்கு ரூ. 2—0—0. போஸ்டேஜ் டப்பி 1-க்கு அணா 8. 2 அல்லது 3 டப்பிக்கு அணா 12. ஆர்டர்கள் கொடுக்கப்பவர்கள் தங்கள் விலாசங்களை விபரமாகவும் தெளிவாகவும் எழுதவேண்டியது.

எங்கள் முறப்பாவை வாங்கப்பட்டவர்கள் டப்பியின்மேல் ரிஜிஸ்டராயிக்கப்பட்ட டிரேட் மார்க்கைப் பார்த்தும் அடியிற்கண்ட விலாசம் சரியாக இருக்கப்பட்டதைப் பார்த்தும் வாங்குகள். இல்லாவிடில் மோசம் போவீர்கள். ஒரு தடவை உபயோகித்தால் பூரணகுணமாகும் இரண்டு, மூன்று டப்பிகளை உபயோகித்தால் மரணகாலபரியந்தம் எவ்விதமான வியாதியும் அணுகாது. நமக்கு ஏஜண்டுகள் தேவையாயிருக்கிறது. இஷ்டமிருக்கும் பட்சத்தில் எங்கள் ரூல் சட்டத்தைத் தருவித்துப் பாருங்கள்,

டி. மன்னுலால், டில்லிவைத்தியர், சாலாமிசிரிமுறப்பா டிபோ, பெங்களூர் சிடி.

சவரன் படைமருந்து.

எப்பேர்ப்பட்ட தீராத மேகப்படைகளையும், மேகரணங்களையும், வண்ணான் சிரங்கு பொறுக்க முடியாத நமைச்சல்களையும் 24 மணி நேரத்தில் கண்டிப்பாய் குணப்படுத்தும். குணமில்லையென்றால் பணம் வாபீஸ் செய்யப்படும். புட்டி 1-க்கு அணா 12. 3 புட்டிக்கு சார்ஜ் இனும்.

சவரன் அண்டு கம்பேனி,
10, கச்சாலீஸ்வர அக்ரஹாரம், சென்னை.

சந்தாதாரர்களே!

சுமார் இரண்டு வருடகாலமாகத் தமிழ் நாவலர் அ. ரா. மாதவராய முதலியாரால் நடத்தப்பட்டு சன்மார்க்கபோதனை, பழமொழிகள், நாவல்கள், விகடங்கள், இவற்றுடன் வெளிவரும் குணபோதினி என்றமாதப்பத்திரிகையை ஆயிரக்கணக்கான ஜனங்கள் வாசிக்கின்றனர். நீங்களும் வாசியுங்கள்.

வருடசந்தா ரூபா 1—8—0.

குணபோதினி ஆபீஸ், பெங்களூர். (ச)

ஓம் மகத்வமுள்ள

மஹானால் கிடைத்த அருமையான மூலிகையும் தாயத்தும்.

குஷ்டம், க்ஷயம், மூலம், கிரஹணி, பிர்ம்மை பைத்தியம், இருமல், வலிப்பு, மூத்திர வியாதி, முதல் நாள் பட்ட சகலவித வியாதிகளும் பலவித கஷ்டங்களும் கவலைகளும் உடனே நீங்கும். புத்திரபாக்கியமில்லாதவர்களுக்கு 48 நாளில் கெர்ப்பம் உண்டாகும் மஹானுடைய உருபையால் மனம்போல் குழந்தை பிறக்கும வேண்டியவர்கள் பதிலுக்கு (ஸ்டாம்பு) வைத்தனுப்பவும். அடுத்த தபாலில் சகல விபரமும் கிடைக்கும் எந்த தேசத்து ஸ்டாம்பும் அனுப்பலாம்.

எஸ். ஏ. கே. பிள்ளை,
மேட்டுப்பாளையம், கோயமுத்தூர் ஜில்லா, சவுத் இந்தியா.

நேர்த்தியான பிரிண்டிங்

ஜி. எஸ். மணியா அண்டு கோ., தஞ்சாவூர்.

இவ்வச்சி யந்திரசாலையை மிஸ்டர் கோபால சாமிஐயரிடமிருந்து வாங்கி இப்போது மிஸ்டர் டி. எஸ். கிருஷ்ணராவ் வெகு நன்ருகவும் கிறமையாகவும நடத்திவருகிருர். இந்த அச்சியந்திர சாலையில் தமிழ் இங்கிலீஷ் புஸ்தகங்கள், நோட்டீசுகள் விஸிடிங்கார்டுகள், கோர்ட் பெடிஷன்கள் மற்ற மனுபாரங்கள் சுத்தமாகவும் நேர்த்தியாவும் அச்சடித்துக் குறைந்தசார்ஜுக்கு வேலை செய்து கொடுக்கப் டும், முனிஸிபாலிடியார்களும் ஜில்லா போர்டார்களும், இந்த அச்சுக்கூடத்தின் நேர்த்தியான பிரிண்டிங்கைக் கவனித்து இதில் அச்சுவேலை கொடுத்து வருகிருர்கள். குறித்த காலத்தில் வேலை செய்து கொடுக்கப்படும்.

தயாராய் விட்டது.

ஊருகாய் தினுசுகளும் சட்டினிகளும் கைதேர்ந்த பிராமணர்களைக்கொண்டு செய்விக்கப் பட்டன.

கடுகுமாங்காய் 1 சேர் டின் விலை ரூ.	1	0	0
எலுமிச்சம்பழம் ,,	1	0	0
இஞ்சி ஊருகாய் ,,	0	10	0
கடாரங்காய் ,,	1	0	0
மாவடாம் 100-க்கு ,,	1	4	0
அசல் பாதம் அல்வா ,,	2	0	0
அப்பளம் 100-க்கு ,,	1	0	0
ரசம்பவுடர் ¼ படி டின்	1	0	0
சாம்பார்பவுடர் ¼ படி டின்	1	0	0
பருப்புப்பொடி ¼ படி டின்	1	0	0

3 ரூபாய்க்கு ஆர்டர் செய்கிறவர்கள் ஒரு ரூபா முன்பணம் அட்வான்ஸாக அனுப்பவும். பினங்கு சிங்கப்பூருக்கு ஏஜண்டுகள் தேவை.

THE INDIAN PICKLES CONDIMENT MANUFACTURING Co., Madras.

T. B. Jayasunker Davey
இயற்றிய
ரத்னப் பிரகாசம்.

நவரத்தினங்களின் குணங்கள், தோஷங்கள், பரீக்ஷை, நல்ல ரத்தினங்களை அணிவதனல் உண்டாகும் நன்மைகள் இவைகளைப்பற்றி கூறும் அபூர்வ நூல்.

விலை அணு **8**.

Apply to:—
R. B. தவே அண்டு சன்ஸ்,
தஞ்சாவூர்.

இனிய நாவல்கள்.

பார்லாமணி	2—0—0
மேனகா 1-ம் பாகம்	1—8—0
ஷை 2-ம் பாகம்	1—8—0
வஸந்த மல்லிகா	1—0—0
ராஜேந்திர மோஹனு	0—12—0
தென்னூர் கோலை	1—4—0

ங்களிடம் எல்லாவிதத்தமிழ்ப் புஸ்தகங்களும் இருக்கின்றன. உடனே கியாட்லாகுக்கு எழுதுங்கள். இனமாய் அனுப்பப் படும்.

சாரி அண்டு கம்பெனி,
தபால் பெட்டி 281, மதருஸ்.

என்னை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?

நான் ஸ்திரீ புருஷர்களின் உயிரைக்காக்கும் கைவல்ய நவநீதம். வாழ்க்கையின் சுகம், காதற்பெருக்கு, பரவச முதிர்ச்சி முதலானதுகளை ஊட்டுகிறவன்.
,, ஸ்திரீ புருஷ லக்ஷணங்களையும், சரீர கோட்பாடுகளையும் விவரித்துக் கூறுபவன்.

அதனுல்தான்

சகலதேச வாலிபர்களும், ஸ்திரீகளும், புருஷர்களும் என்னை விரும்புகிருர்கள்,

நான்தான்

ஆநந்தமகிளா.

படங்களுடன் கூடியவன் விலை ரூ 1-0-0

சொற்ப பிரதிகளே கைவசமுள. தாமதிக்காமல் இன்றே எழுதுங்கள்.

விலாஸம்:—

பி. எஸ், ராய், புதுவை.

பெரிய கம்பெனி! **நாணயமான சரக்குகள்!!**

திருப்தியில்லாத சரக்குகள் திரும்பப் பெற்றுச் சுத்தமான பட்டு, சகாய விலை, புதுமாதிரியான பட்டுப்புடவைகள், ரவிக்கைகள், சால்வைகள், வெண்பட்டு வேஷ்டிகள், தாவணிகள், மலைபாளத்து முண்டுகள் முதலிய எல்லாப்பட்டு தினுசுகளும் கிடைக்கும். எந்தப் புதுமாதிரியும் செய்து அனுப்பலாம்.

புடவைகள் 20 முதல் 250 ரூபா வரை கிடைக்கும். ரவிக்கைகள் 3 முதல் 15 ரூபா வரையில் கிடைக்கும். வெண்பட்டு வேஷ்டிகள் 10 × 6 ஜோடி 20 முதல் 35 ரூபா வரையும் 9 × 6 ஜோடி 1-க்கு 18 முதல் 30 ரூபா வரை.

மற்றும் எல்லா விபரங்களுக்கும் கேட்லாக் தருவித்துப்பார்த்துக்கொள்ளவும்

கேட்லாக் இனம்!

Manager.
Silk Pitamber Co.,
Dharanagar Street,
BENARES CITY.

விலாசம்:—
மானேஜர்,
பட்டு பீதாம்பர கம்பெனி,
காசி.

பெட்டியில் வைத்துப் பூட்டுங்கள்.



உங்கள் நகைகளையும் விலையுயர்ந்த சாமான்களையும் இந்த லட்சுமி டிரங்குப் பெட்டியில் வைத்துப் பூட்டுங்கள். எங்களுடைய தொழிற்சாலைகளில் தகுந்த வேலைக்காரர்களைக் கொண்டு எஃகுத் தகடுகளினுல் டிரங்குப் பெட்டிகள் செய்யப் படுகின்றன. கண்ணனூர் கொச்சி மைசூர், விசாகப்பட்டணம், கும்பகோணம் முதலியவிடங்களில் நடந்த தொழிற்பொருட் காட்சி சாலைகளில் தங்கப்பதக்கப் பரிசும் வெள்ளிப் பதக்கப் பரிசும் பெற்றிருக்கின்றன நமது தொழிற்சாலையில் செய்யப்படும் டிரங்குகளின் வேலைப்பாட்டையும் அழுத்தத்தையும் பற்றி யாவரும் மெச்சிப் பேசியிருக்கிருர் ஆர்டர்கள் கொடுத்தாலும் செய்து தருகிறோம். ஒரு முறை ஆர்டர் செய்து பாருங்கள்.

(கேட்லாக்குக்கு எழுதுங்கள்)

நாகப்பட்டணம் சுதேசி ஸ்டீல் டிரங்கு கம்பெனி, Estd. 1906.
தஞ்சாவூர்.

Printed at the Vartakamitran Press and published by E. Suryanarayana Aiyar B. A., B. L., at 2109 Yellaiamman koil Street, Tanjore.